வெகுதானிய பங்குனி


# சைவநீதி

**SAIVA NEETHI**

MONTHLY MAGAZINE OF SAVAISM

MARCH - APRIL 1999

சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும் மாத இதழ்.







ரூபா 20/-

கொழும்பு அருள்மிகு பொன்னம்பலவாணேஸ்வரர்
மஹோற்சவச் சிறப்பிதழ்
1999-03-22 - 1999-03-31

உ
சிவமயம்

# சைவநீதி

## பொருளடக்கம் :


| | | | |
|---|---|---|---|
| 1. | முவேடணை. | - ஆசிரியர் | 1 |
| 2. | அருள்மிகு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம் | - பண்டிதர் சி. அப்புத்துரை | 2 |
| 3. | பங்குனி உத்தரம் | - செ. நவநீதகுமார் | 4 |
| 4. | வழக்குரைஞரின் வாதத்திறம். | - பண்டிதர் ச. சுப்பிரமணியம் | 5 |
| 5. | வற்றாத சைவநதி வளமான ஜீவநதி. | - முருக வே. பரமநாதன் | 8 |
| 6. | சிவாலய தரிசனம். | - வித்துவான் வ. செல்லையா | 10 |
| 7. | திருமுறைப் பண்ணிசை. | - ஞானசிரோன்மணி பண்டிதர் ஆர். வடிவேல் | 13 |
| 8. | நேச நாயனார். | - சிவ சண்முகவடிவேல் | 17 |
| 9. | திருவாசகச் சிந்தனை - திருத்தோணோக்கம். | - பண்டிதர் சி. அப்புத்துரை | 18 |
| 10. | உலக சைவப் பேரவை. | | 21 |
| 11. | தர்ம சாஸ்திரம் | - கே. ஆர். வாசுதேவன் | 22 |
| 12. | முதலாஞ் சைவ வினாவிடை புண்ணிய பாவ இயல் | - ஆறுமுகநாவலர் | 22 |
| 13. | சைவசமயம் அடிப்படைத் தத்துவங்கள். | - வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M.A | 23 |
| 14. | உக்கிரகுமாரனுக்கு வேல் வளை செண்டு கொடுத்தமை. | - கூடலான் | 26 |
| 15. | காக்க வேண்டிய கடமைகள்–ஆசாரக்கோவை | | 27 |
| 16. | சிவபுண்ணியஞ் செய்யும் போது நினைவு வேறாதலாகாதெனல் | - ஆறுமுகநாவலர் | 28 |
| 17. | சைவ சமய அறிவுப் போட்டி 1999 | - விதிகள் – விண்ணப்பம் – வினாக்கள் | 29 |



சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக்
கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர் – இதழ் நிர்வாகிகள்.

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய பங்குனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 12

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
திரு.செ. நவநீதகுமார்
42. ஜானகி லேன்,
கொழும்பு 04.

பதிப்பாசிரியர்
திரு. மு. கௌரிராஜா.

## மூவேடணை

ஏஷணா என்னும் வடமொழிச் சொல் ஆசை அல்லது பற்று என்று பொருள் தரும். தமிழில் அது ஏட்ணை எனப்படும். மூன்று வகையான பற்று உண்டு. அவை தானேடணை, தாரேடணை, புத்திரேடணை என்பன. தானேடணை செல்வத்தின் மீதுள்ள ஆசை; தாரேடணை மனைவி மீதுள்ள ஆசை; புத்திரேடணை மக்கள் மீதுள்ள ஆசை. மூவகையான ஆசைகளுமே பிறவிக்குக் காரணமாய் அமைவன. இவ்வாசைகளை நீக்கினால் மட்டுமே பிறவிப் பெருங் கடலினின்றும் கரைசேர முடியும்.

ஒருவன் சம்பாதித்துப் பணம் சேர்த்துத் தன் மனைவி மகனுடன் இனிது வாழ்ந்து வந்தான். பெருமழை பெய்து எங்கும் வெள்ளம். அவன் வீடு வெள்ளத்துள் மூழ்கியது. தான் தேடிய செல்வமுடிப்பைத் தலையிலும் மனைவியையும் மகனையும் தோளிலும் சுமந்து வெள்ளத்துள் நீந்தினான். அப்போ மேலும் வெள்ளம் வந்தது அவனைச் சுமை அழுத்த தலையில் இருந்த பொதியை விலக்கினான் சுமை சற்றுக் குறைந்தது. மீண்டும் ஏதாவதொரு சுமையை நீக்கினாற்றான் அவன் தொடர்ந்து நீந்தலாம் என்ற நிலை. அப்போது மனைவியை விட்டு விட்டான். சிறிது தூரம் சென்றபின் சுமையைக் குறைக்க வேண்டுமெனப்பட்டது. மகனையும் விட்டு விட்டான். இறுதியில் நீந்திக் கரை சேர்ந்தான்.

பிறவிப் பெருங்கடல் என்ற வெள்ளத்துள் அழுத்தியவன் பொன்னாசை, மனைவியாசை, மக்களாசை என்ற மூன்று ஆசைகளையும் விட்டபின் முத்தியாகிய கரையைச் சேர்ந்தான்.

*மாவேழ் சனனம் கெடமா யை விடா*
*மூவே டனைஎன் றுமுடிந் திடுமோ*
*கோவே குறமின் கொடிதோள் புணரும்*
*தேவே சிவசங் கரதே சிகனே.*

-கந்தரனுபூதி-

உ

சிவமயம்

# கொழும்பு
# அருள்மிகு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

- பண்டிதர் சி. அப்புத்துரை -

## ஆலய அமைவிடம்

ஈழத்தின் தலைநகர் கொழும்பின் வடபகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம். சைவசமய கலாச்சாரப் போக்குகளை அப்படியே பரிமளிப்பதாக இது அமைந்துள்ளது. மேற்குலக நாகரிகங்கள் மலிந்து, அலங்கார வேலைகள், வேண்டாத அழகுகள் ஊட்டப் பெற்று, நாளுக்கு நாள் மாற்றம் பெறும் நடையுடை பாவனை வளர்ச்சிகளுடன் ஆலயங்களும் புனர்நிர்மாணம் பெறும் இந்த வேளையில் தலைநகரில் அமைந்துள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் பழமை வாய்ந்த சைவக் கோலத்தை ஒவ்வொரு நிகழ்விலும் போற்றுவதாக அமைந்துள்ளமை பெருமை தருவது. இஃது என்றுந் தொடருவதாக.

இந்து மகா சமுத்திரத்திற்கு அண்மையாக, கொட்டாஞ்சேனைப் பகுதியில், கிழக்கு மேற்காகச் செல்லும் ஜம்பட்டா வீதியிலிருந்து பிரிந்து வடக்கே செல்லும் ஜம்பட்டா ஒழுங்கையில், அவ்வொழுங்கைக்கு மேற்குப் புறமாக ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கிழக்கு நுழைவாயிற் கோபுரம் தரிசனமாகின்றது.

## வரலாறு:

பொன் குமாசாமி, சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் என்னுஞ் சற்புத்திரர்களைப் பெற்றெடுத்த அருமைத் தந்தையான ஸ்ரீ பொன்னம்பல முதலியார் ஒரு சிவபக்தர். என்றுஞ் சிவவழிபாடு செய்துதான் தன் கருமங்களைத் தொடர்பவர். கொழும்பில் ஒரு சிவாலயம் அமைய வேண்டுமென்ற எண்ணம் அந்த உத்தமர் நினைவில் உதயமாயது. இந்த நினைவு தயத்திற்கு அவர் கண்ட கனவு ஒரு காரண மென்பதொரு கருத்தும் உண்டு. அந்தச் சிந்தனை செயற்பட நிலம் வேண்டுமே! இப்போது ஆலயம் அமைந்துள்ள இடம் கொள்வனவு செய்யப்பட்டது. ஆலயம் வளர்ந்தது; 1857 இல் வழிபாடு ஆரம்பமானது. முதலியார் அவர்களின் இரண்டாவது மைந்தன் சேர் பொன் இராமநாதன் அவர்களும் நிறைந்த சிவவழிபாட்டுப் பற்றுடையவர். அவர் இந்திய வழிபாட்டுத் தலங்களுக்கு யாத்திரை மேற் கொண்டு மீண்டார். அப்பா தொடக்கி வைத்த ஆலயத்தைக் கருங்கல் கொண்டு புனிதப்

புகழ்பூத்ததொரு தலமாகக் காண வைத்தார். ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கருங்கற் கோவிலாகி 1917 இல் மீண்டும் மகா கும்பாபிஷேகங் கண்டது.

### ஆலயத்தைத் தரிசிப்போம்:

ஜம்பட்டா ஒழுங்கையில் அமைந்த முன்புற (ஆலயத்தின் கிழக்குப்புற) வாயிலினூடாகக் கோபுரத்தைக் கடந்து உள்ளே செல்லும் போது, இடதுபுறத்தே, ஆலய சிவாசாரியர்கள், பணியாளர்கள் என்போரது இல்லங்களையும் வலதுபுறத்தே அரசு வேம்பு முதலிய மரங்களையும், தொடர்ந்து இடப்புறத்தே அலுவலகம்; நூல்நிலையம் எனபவற்றையும் பார்க்கின்றோம். அத்துடன் ஆலயத்தின் முன்வாயிற் கோபுரம் தரிசனமாகி வணங்க வைக்கின்றது. தெற்கு வீதியில் அம்பாள் சந்நிதிக் கோபுரம் வழிபாட்டிற்குரியதாகும். தென் மேற்கில் தாண்டவப் பிள்ளையாரைச் சிறிய சந்நிதியொன்றில் வணங்க முடியும். மேற்கில், வடக்குத் தெற்காகச் செல்லும் இராமநாதன் வீதியிலிருந்து உள்ளே செல்லச் சந்தர்ப்பமளிப்பதொரு புதிய நுழைவாயிலைப் பயன்படுத்தும் வாய்ப்பினை விரைவிற் பெறவுள்ளோம். வடமேற்கிற் கோமாதாவாகிய பசுக்களின் வாழ்விடம் அமைந்துள்ளது. ஆலயக் கிழக்கு வாயிலுக்குச் சற்று வடகிழக்காகத் தேர் முட்டியையும் தீர்த்தக் கிணற்றையுங் காணுகின்றோம்.

ஆலயத்தினுள்ளே மூலமூர்த்தியாக, ஸ்ரீ சிவகாமசௌந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் என்ற வகையில் சதாசிவமூர்த்தமாகிய சிவலிங்கப் பெருமானை தரிசிக்கின்றோம். உள்வீதியில் தென்கிழக்காகப் பாகசாலை தென்மேற்கில் விநாயகர், தொடர்ந்து சோமாஸ்கந்தர், மகாவிஷ்ணு, பஞ்சலிங்கம், சுப்பிரமணியர், ஷண்முகர், சண்டேஸ்வரர், வைரவர், ஸ்ரீ சுவர்ணவைரவர், நவக்கிரகம், என்னும் மூர்த்திகளைச் தரிசிக்க முடிகின்றது. சனைச்சுரன், நர்த்தன விநாயகர், சந்தான கோபாலர், ஸ்ரீ தட்சணாமூர்த்தி, பிரம்மா, துர்க்கை, மாரியம்மன் ஆகிய மூர்த்திகளைக் கோட்டங்களிலும் பிரகாரத்திலும் வணங்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. தம்ப மண்டபத்திற் கொடித்தம்பம், நந்தி, பலிபீடம், என்பவற்றைத் தரிசிக்கின்றோம். சூரிய சந்திரரையும் வணங்கும் வாய்ப்பைப் பெறுகின்றோம். தென்புறம் நோக்கிய சந்நிதியில் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பாளையும் வணங்க முடிகின்றது. மகா மண்டபத்தில் நித்தியாக்கினி குண்டம் இருக்கின்றது. எழுந்தருளிமூர்த்தி, துவாரகணபதி, சுப்பிரமணியர் மூர்த்தங்களையும் அங்கு வணங்குகின்றோம். ஸ்ரீ நடராஜரையும் அம்பாளையும் அவர்களுக்கென அமைந்த சந்நிதியிற் தரிசித்து வணங்குகின்றோம்.

### மஹோற்சவம்:

பங்குனி உத்தரத்தை அந்தமாகக் கொண்ட பத்துத் தினங்கள் மஹோற்சவ தினங்களாகும். ஒன்பதாவது நாள் தேர்த்திருவிழாவன்று ரதபவனி கண் கொள்ளாக் காட்சிக்குரியது. இறுதி நாளான்று காலை தீர்த்தமும், மாலை திருக்கலியாணமும் தொடர்ந்து கொடி இறக்கமும் நடைபெறும். கருணையின் வடிவு அன்னை; ஞான சொரூபி சிவம்; கருணையும் ஞானமுஞ் சேர்தல் திருக்கலியாண தத்துவமென்ப.

# பங்குனி உத்தரம்

- செ. நவநீதகுமார் -

சிவ விரதங்களுள் ஒன்று கலியாண சுந்தர விரதம். பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்தன்று கலியாண சுந்தர மூர்த்தியைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் இதுவாகும். அம்மை அப்பரை மணக்கோலத்திற் தியானித்து வழிபடுவதனாற் திருமண விரதம் என்றும், பங்குனி மாத உத்தரத்தன்று அனுட்டிப்பதால் பங்குனி உத்தரம் என்றும் பெயர் பெறுவதாயிற்று.

அன்று அம்மையப்பருக்கு அபிஷேக ஆராதனை செய்து கலியாண சுந்தர மூர்த்தியைத் தியானித்து வழிபட்டு இரவிலே பரமான்னம் பழம் உட் கொண்டு தருப்பைமேல் நித்திரை செய்தல் வேண்டும். மறுநாட் காலை சிவனடியாரோடு பாரணை பண்ணல் வேண்டும்.

இவ்விரதத்தையனுட்டித்துப் பிரமன் சரஸ்வதியை அடைந்தான். இலக்குமி விஷ்ணுவையும், இந்திரன் இந்திராணியையும் அடைந்தனர்.

பார்வதியைப் பரமேஸ்வரன் திருமணம் செய்த நாள் பங்குனி உத்தரமாகும்.

*"ஆதியின் உலகமெல்லாம் அளித்திடும் அன்னை தன்னைக்*
*காதலின் வதுவை செய்யக் கருதினை கணித நூலோர்*
*ஓது பங்குனியின் திங்கள் உத்தரம் இன்றே யாகும்*
*ஈதுநன் முகூர்த்தம் எந்தாய் இமயமேல் வருதி என்றான்'*

- கந்தபுராணம் -

திருமயிலாப்பூரில் சிவநேசர் என்றொரு செட்டியார் இருந்தார். அவருக்குப் பூம்பாவை என்ற பெயருடைய மகள் இருந்தாள். திருஞானசம்பந்த சுவாமிகளின் மகிமையை அறிந்த சிவநேசச் செட்டியார் பூம்பாவையை அவருக்கே மணம் முடித்து வைக்க எண்ணினார்.

பூம்பாவை பூப்பறிக்கும் போது பாம்பு தீண்டியிறந்தாள். சிவநேசர் மிக வருந்தி அவள் உடலைத் தகனஞ் செய்து எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் எடுத்து வைத்தார். சம்பந்தப் பிள்ளையார் திருவொற்றியூருக்கு வந்தார். அங்கிருந்து அவரைத் திருமயிலாப்பூருக்கு அழைத்து வந்த சிவநேசர் நடந்தவற்றைக் கூறினார்.

எலும்பும் சாம்பரும் உள்ள குடத்தை வருவித்துக் கபாலீஸ்வரர் கோயில் திருமதிற் புறத்தே குளக்கரையில் வைத்துப் பிள்ளையார் "மட்டிட்ட புன்னயம்" என்ற பதிகம் பாடினார். அதிலே ஏழாவது பாடலிற் பங்குனி யுத்திர நாளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

*மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்*
*கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்*
*பலி விழாப் பாடல் செய் பங்குனி யுத்தர நாள்*
*ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்"*

குடமுடைந்தது. பூம்பாவை உயிர் பெற்று எழுந்தாள்.

பங்குனியுத்தரத்தை இறுதியாகக் கொண்டு சிவாலயங்களில் மகோற்சவம் நிகழ்வதுண்டு. காஞ்சியிலும், திருவாரூரிலும் திருமயிலாப்பூரிலும் சிறப்பாக இவ்வுற்சவம் நடைபெறும்.

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயிலில் பங்குனி உத்தரத்தைத் தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு பத்து நாட்கள் மகோற்சவம் நடை பெறும். பங்குனியுத்திரத்தன்று காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை திருக்கலியாணமும் கொடியிறக்கமும் நடைபெறும். அருள்மயமான சத்தி அறிவு மயமாகிய சிவத்துடன் சேர்ந்து இப்பிரபஞ்சத்தை இயங்க வைப்பதே திருக்கலியாண விழா உணர்த்தும் தத்துவமாகும்.

# வழக்குரைஞரின் வாதத்திறம்

- பண்டிதர் ச. சுப்பிரமணியம் -

நாவலர்கோன் எனும் சிறப்புத் திருநாமம் பெற்றவர் சுந்தரமூர்த்திநாயனார். தம்பிரான் தோழருமாவர். அவருடைய முதற் திருமண வைபவத்தில், நடுவே புகுந்து வழக்குத் தொடுத்து வெற்றி கண்டவர் சிவன். அன்று அவர் வாதி. வழக்கிலே சமர்ப்பித்த ஆவணம் மாயமான ஆளோலை – அடிமை ஒலை. தாமே வெற்றி பெறும் வாய்ப்புக்காக முன்னமே திட்டமிட்டு, ஆவணப் பிரதியிலொன்றைச் சுந்தரர் பறித்துக் கிழிக்க வைத்து ஒரு நாடகமாடினார். வழக்கிலே சாட்சிகளும் சார்பாகவே சாட்சியமளித்தனர். எல்லாவித வாய்ப்புக்களோடும் வாதியான சிவன் வழக்கிற் சாதகமான தீர்ப்புப் பெற்று வெற்றி பெற்றார்.

அன்று பிரதிவாதியான சுந்தரர் செய்த ஒரு தவறினாலும், மாய ஆவணம், வாய்மை ஆவணம் என ஏற்கப்பட்டதாலும் வாய் அடங்கித் தோல்வியடைந்து அடியவன் – ஆளுடைய நம்பியானார். வழக்குரை ஆரம்பத்திலேயே சுந்தரர் விருத்த வேதியனாக வந்தசிவனை "இவன் பழைய மன்றாடி போலும்' – பழைய கோட்டுப்புலி – என மதிப்பீடு செய்து சொன்னார்.

அப்படியான ஒரு பெரிய மன்றாடி முன் வந்து ஒரு குழந்தை மன்றாடி வழக்குரைப்பது வேடிக்கையல்லவா. அதிலும் அந்த மன்றாடியே பிரதிவாதியாகவும் அவரே தீர்ப்பளிக்கும் நீதிபதியாகவும் கொண்டு வாதாடுகிறார். வாதாடிச் சாதகமான தீர்ப்பும் பெறும் நிலையில் வழக்குரைக்கும் வாதத் திறம் பெருவியப்பளிப்பதாகும்.

முன்னுரையிலேயே பிரதிவாதி, நீதிபதியாயும் ஒற்றைக் காலில் நின்று மன்றாடும் பெருமானுக்கு உச்சிகுளிர வெண்ணெய் தடவுகிறார்.

*தோற்றம் துடியதனில்; தோயும் திதி அமைப்பில்;*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்; – ஊற்றமாய்*
*ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம்; முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு*

என்ற வாக்கின்படி சர்வலோகத்துக்கும் ஏக நாயகனாக நின்று அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் ஒருதனி முதல்வன் நீ சிவனே. உன் செயலின்றி அணுவும் அசையாது. இவ்வைந்து தொழிலுமே உண்மையில் உன் தொழிலாம். இவற்றை ஏன் செய்கின்றா யெனில் நியாயம் இருக்கிறது; சொல்வேன்:
*(சிதம்பரம் செய்யுட் கோவை 2ம் பா.1 – 13 அடிகளின் சாரம்)*

ஈன்றணிய சிறுகுழந்தை நோய்வாய்ப்படின் அதற்குரிய மருந்தைக் குழவிக்குக் கொடுத்தால் அதன் குடல் மருந்து வேகத்தைத் தாங்காது எனத் தாயே மருந்தை உண்கிறாள். பாலூட்டுகிறாள். பாலுடன் மருந்தின் ஆற்றல் தணிந்து போய்க் குழவியைச் சுகப்படுத்துகிறது.

உயிர்களாகிய குழந்தைகளின் பிறவி நோய்க்கு மருந்தாவது நினது அருட் கூத்தின் தரிசனமே. அதனை அருளே உருவான சிவகாமியம்மையார் – தாயார் தரிசிக்கக் காட்டுகிறாய். அதனை அம்மை கண்ணால்

நோக்கியருந்தி உயிர்களுக் கூட்டுகிறாள். *(ஷ. 14 – 21 வரை அடிகள்)*

அன்றியும் உனது அருமருத்தனைய அருள்வாக்காக அலர்ந்த அறவுரைகளும் அநந்தம். அவை வேதசிவாகம புராண இதிகாசமெனப் பலவாயுள்ளன. அவற்றில் நமக்கு இருவழிகள் பிரதானம். இவை இல்லறம் துறவறமென வகைக்கப்படுத்தப்பட்டுள. இவை சிறந்தவை. *(21 – 23 அடிகள்)*

நல்லறம் எனப்படும் இல்லறந்தானும் மனைத்தக்க மாண்புடை நல்லாள் இல்லாளாக அமைய அநுட்டிக்க வேண்டிய அறங்களைத் தப்பாது நிறைவேற்றி முடிக்க வேண்டும். *(24 – 33 அடிகள்)*

அதன் மேலுள்ள துறவறமோ மிகவும் செயற் கருஞ் செயல்களைச் செய்ய வேண்டியதாக விதிக்கப்பட்டுள்ளது. ஆதலில் எம்போன்ற சிற்றறிவும் சிறுவாழ்நாளும் சிற்றாற்றலும் கொண்டவர்களால் வழுவின்றி இயற்றி நாம் பெற வேண்டிய இலக்கை அடைவது அரிதினும் அரிதாகும். ஆதலில் எம்மை அவ்வழி வந்தடைவரென எதிர்பார்த்தல் சாலாது. *(33 – 47 அடிகள்)*

அந்நெறிகளை அநுசரிக்க அறிவாற்றலில்லாத சிறியேே முக்கு உய்யு நெறி – இலகுவானது – ஒன்றை உணர்த்துவீரென்று, பிறவிப் பிணிக்கஞ்சிய நான் அருளுள்ளமுடைய அறவோரிடம் சென்றிருந்தேன். அவர்கள் கருணை கூர்ந்து மூன்றுவழி காட்டினர். அவையாவன:–

*முத்திதரும் தலங்கள் மூன்றுள் ஒன்று திருவாரூர் அங்கு பிறந்தால் முத்தி பெறலாம்*

*அடுத்தது காசித்திருப்பதி அங்கு சென்று இறந்தால் முத்தி பெறலாம்.*

*இறுதியாக மிகஇலகுவழி தில்லைச் சிற்றபல தரிசனம். என்றனர்.*

இவற்றிலும் முன்னிரண்டும். முன்னைத் தவமுடை யோருக்கு மாத்திரம் முயற்சியின்றியும் கைகூடப் பெறலாம். இக்கருத்துச் சாஸ்திர நூல்களிற் சொல்லப்பட்டது மன்றி உலகியல் வழக்கிலும் எல்லோரும் கூறிவரும் உண்மையென உணரமுடிகிறது.

ஆரூரிலே பிறத்தல் இயற்கையாய் நிகழ வேண்டும். காசிசேர்தலும் முயன்றாலும் நிச்சயமில்லை. ஆனால் அம்பலக் கூத்தை அடியவர் முயன்றால் பெரும்பாலும் கிட்டுவது சாத்தியமாகலாம்; என்ற எண்ணத்தால் பெருமான், அம்பலம் காண அணுகினேன். *(48 – 72 அடிகள்)*

*(2. 69 . 84 அடிகள்)*

அதனால்,

*சிற்றுயிர்க் கிரங்கும் பெரும்பற்றப் புலியூர்*
*உற்றநின் திருக்கூத் தொருகால் நோக்கிப்*
*பரகதி பெறுவான் திருமுன்பு எய்தப்*
*பெற்றனன்; அளியனேன்; பற்றில னாயினும்*
*அன்பிலை கொடியை என்று அருளா யல்லை;*
*நின்பதம் வழங்குதி நிமல என் றனக்கே;*
*மருந்துண் வேட்கையன் மனம் மகிழ்ந் துண்ணினும்,*
*தன்முகம் சுழித்துத் தலைநடுக் குற்றுச்*
*கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்,*
*வாய்ப்புகு மாயின் அம் மருந்திரு வருக்கும்*
*தீப்பணி மாற்றுதல் திண்ணமே, அன்றி*
*நொதுமலும் பகையும் போக்கி ஒருபொருள்*
*விழுத்தகு கேண்மையோர்க் குதவல்*
*வழக்குமன்று ஐய மன்றுடை யோய்க்கே.*

பொருள் : சிலநாள் வாழ்நாள் சிற்றறிவுயிர்களுக்கு உய்திபெற உதவவேண்டுமெனும் பெருங்கருணை நிறைந்த உள்ளத்தோடு பெரும் பற்றப் புலியூரில் பொருந்திய ஆடவல்ல பெருமானே! உனது

திருக்கூத்தை ஒருமுறை தரிசித்து, பெறுதற்கரிய பரகதி (முத்தி) பெறும் கருத்துடன் உனது திருமுன்னிலையடைந்தேன்; அதுவும் நின் திருவருள் சேர்த்ததேயாம். ஏனைவழிகளிலே சென்று இடர்ப்பட்டெய்த்து விழாமல் இங்குய்த்தது அருளன்றி என்வலதன்று. இரங்கத்தக்கேன்;

எம்பிரானே! நான் பத்தியில்லாதவனாயினும், என்னை அன்பில்லாதவன் கொடியன் என்று புறக்கணித்து அருள் புரியாதிருக்க வன்நெஞ்சனல்லை நீ; இயல்பான கருணை இரங்குவிக்கும்; ஆதலில் நினது திருவடி நிழலை எனக்குத் தந்தருளுதி; நிமலனே! எனக் கருளு நீ.

சான்றாக உலகியல் வழக்கொன்றைக் கூறுகிறேன்:

சுவாமீ! நோயாற் பீடிக்கப்பட்டு அதனைத் தணிக்க மருந்துண்ண வேட்கையுடையவரில், ஒருவன் மனமுவந்து வாங்கி மருந்தை அருந்துகின்றான், மற்றொருவனோ அவாவின்றி முகம் சுழித்து தலைநடுங்கக் கண்ணீர் விட்டழுது பலவந்தத்தால் ஊட்ட உண்டானாயினும் இருவர் வாயிலும் மருந்து சேர்ந்து விட்டதாயின், அவ்விருவருக்கும் நோய் தீர்ந்து விடுதலும் உடல் நலம் பெறுவதும் திண்ணமன்றோ அதுபோலவே.

அருமருந்து திருமருந்தெனப் போற்றப்படும் நீயும் விரும்பியோ அன்றி விரும்பாமலோ வந்து தரிசித்தோமுடைய நோய் தீர்த்துச் சுகந்தர வேண்டியவன். நானும் தரிசித்து விட்டேன் ஆதலின் நோய் தீர்த்துச் சுகமருளுக.

அவ்வாறன்றி, இவன் பொதுவன் இவன் பகைவன் எனக் கருதி எந்த ஒரு அரும் பொருளெனக் கருதப்படுகிறதோ அந்தத் தீர்வினை – நடுநின்று நீதி வழங்குதல் – விழுமிய நண்பர் என்பவர் பக்கத்துக்கு – ஒருதலைப் பட்சமாக – வழங்குவது முறையன்று.

ஐயனே – உலகுமுழுதுடைய நாயகனே மன்றுடையோனே – நீதிபதியே! பொது மருத்துவமனை வைத்திய நாதனே,

வைத்தியனும் நீதிபதியும் அங்கு வந்தார் எவருக்கும் நோய்க்குரிய மருந்தும் சிகிச்சையும், ஓரம் போகாது நடுநிலையான தீர்வும் வழங்கக் கடப்பாடுடையர்.

வாதியாய் நின்று, பழைய மன்றாடி நாவலர் கோனாகிய சுந்தரரையே வாயடைக்கச் செய்து வழக்கு வென்ற திறமையாளரான மன்றாடியையே,

பிரதிவாதி நீதிபதியென இருநிலையிலும் வைத்தியநாதன் என்ற நிலையிலும் வைத்து வாதாடி வழக்குரைத்து (சட்டப் பிரமாணம் உலக நடை) என்பவற்றிலே சான்றுகள் காட்டி, மன்றாடியே வாயடங்கி மௌனியாகி அதனால் தீர்ப்புக்கு உடன்பட்டாராகச் ஜெயக் கொடி நாட்டிய சாதுரியர் குமரகுருபர சுவாமிகள்.

*"சொல்லுக சொல்லை பிறிதோர் சொல் அச்சொல்லை*
*வெல்லும் சொல் இன்மை அறிந்து"*

தமிழ்மறை

நாமும் நல்லோரது இந்நலங்கனிந்த திருவாக்குகளைக் கொண்டு மன்றாடும் எம்பிரான் திருமுன்னின்று மனமார நினைத்து வாயாரப்பாடி வேண்டுவோமாயின் சிவனருள் பெறல் திண்ணம். மன்றுகளிலும் பழைய வழக்குத் தீர்வைச் சான்று காட்டிச் சாதித்தல் வழக்காறே.

# வற்றாத சைவநதி வளமான ஜீவநதி

- முருகவேபரமநாதன் -

நதிகளால் நலம் பெற்ற நாடுகள் எகிப்து, மொசொப்பத்தோமியா, சிந்து வெளிப்பிராந்தியம், சீனா என்பனவாகும். நதிக்கரை நாகரிகம் வளர்ந்த வரலாறு உலகின் மேம்பாட்டுக்கான முத்திரை. இந்த ஆறுகளின் பாங்கரிற் குடியேறிய மக்களின் வதிவிடங்களிலேதான் ஆலயங்கள் உருவாய் இருக்கலாம். எனவே ஆறுகளும், குளக்கரைகளும் கோயிலின் புனிதம் பேணும் சூழ்நிலைக்கு இயைவாய் அமைந்தமையாற் போலும் ஆற்றோர நாகரிக முதிர்ச்சியின், வளர்ச்சியின் அடையாளங்களில் ஒன்றான சமயம்சார் கோஷங்கள் உருவாகி வளர்ந்து மக்களை வளம்படுத்தின. இப்பாணியிலே சைவம், நதிகளோடும் குளங்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு தன் கலை கலாச்சார, நாகரிக ஆளுமைகளை வளர்த்து நிலை பெறச் செய்தது. புனிதம் என்ற பொருளிலே தீர்த்தம் சைவத்தின் முக்கிய அம்சமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்பது தாயுமானார் வாக்கு. இம் மூவகைச் சிறப்பும் சைவத்தின் தனித்துவமானவை போன்றுகுரு லிங்க சங்கம வழிபாடும் போற்றப்பட்டது. ஆர்த்தபிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன் என மணிவாசகரும், அத்தா உன்னடியேனை அன்பால் ஆர்த்தாய் அருள் நோக்கிற் தீர்த்த நீர் ஆட்டிக் கொண்டாய் என அப்பரும் அருளிப் போந்தனர். இப்புனித தீர்த்தம் போற்றப்பட்டது சைவ நெறியில். ஆறில்லாத ஊருக்கழகு பாழ் என்பது அவ்வை கூற்று. பரத கண்டத்தில் கங்கை, யமுனை,கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி. பொருநை, வைகை போற்றப் படுகின்றன. இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் ஆறே எனப்பாடினார் பாரதி. இறைவன் ஜடாபாரத்தில் மிளிர்வதும் கங்கையே. மாணிக்க கங்கையின் மகிமையை அருணகிரியாரும். கதம்ப நதியில் அமைந்த பாலாவியை சம்பந்தர், சுந்தரரும் திருவெண்காட்டு முக்குள நீர் அருமையை தேவார ஆசிரியர்களும் போற்றினர். கங்கையிற் புனிதமான காவிரி என்பது தொண்டரடிப்பொடி வாக்கு ஆற்றுப்படுக்கை நாகரிகம் மொகஞ்சதாரோ, ஹரப்பாப் பட்டினங்களில் திராவிட, சைவ சமயம் சார்ந்தனவாக அமைந்தன வென ஆய்வாளர் இனம் கண்டுள்ளனர். மிகத் தொன்மையான சிவலிங்க வழிபாட்டின் எச்சங்கள் அங்கே தென்படுகின்றன. எனவே சைவ சமயம் நன்கு பரந்திருந்த இப்பிரதேச வரலாறு சைவப் பெருநெறிக்கு அரண் எனலாம்.

கடலோடு கலக்கும் நதி மீண்டு திசை திரும்புவதில்லை. ஆற்று நீரும் கடல் நீரும் பிரிவின்றி ஒன்றித்து விடுகின்றன. ஆறுகள் வெவ்வேறானவை; எல்லாம் கலக்குமிடம் கடல்தான். எனவே வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் ஐயநின் விளையாட்டெல்லாம் எனப்பாடிய தாயுமானார் முடிவில் ஒரு நதித்திரள் போற் கடலோடு கலந்த தன்மையைப் பாடினார். ஆறுகளின் பெயர் வேறு, சேர்விடம் ஒன்று. சமயங்களின் பெயர் வேறு சங்கமம்

ஒன்று. ஆறு ஒன்று படித்துறைகள் வேறு. கங்கை ஒன்று நீராடும் கட்டங்கள் வெவ்வேறு. ஆற்றினியக்கமும் ஆறும் அவன் வண்ணமே. இந்தச் சமயம் கடந்த சச்சிதானந்தப் பொருளை அறிவிக்க அறியும் உயிர் அடையுமிடமும் ஒன்றே. தெய்வம் ஒன்று சமயம் வேறு. சமுத்திரம் ஒன்று; நதிகள் பல. ஆறு நிரந்தரமாய் ஓடும்: மக்கள் வருவர் போவர். இந்நிலையிலே ஆறுபல திறனிலே பயன்படுகிறது. பயன்படுத்தப்படுகிறது.

1. விவசாயம் தோட்டம் போல்வன. நதிகளைத் திசை மாற்றி வரண்ட பிரதேசங்களை வளமாக்கும் விஞ்ஞானம்.

2. போக்குவரத்து, பொருள்களைக் கொண்டு செல்லல் போன்றன ஆற்றின் உதவியால் நிகழ்கின்றன.

3. நீரைச்சுத்திகரித்து நன்னீராக்கி மக்களுக்குக் குளாய் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

4. ஆற்று நீரை வடிகால் மூலம் யந்திரங்களிலே விழப்பண்ணிப் பாரிய எந்திரங்களை இயக்கும் விசையாக மாற்றிப் பெரிய தொழிற்சாலைகளை இயக்குகிறது விஞ்ஞானம்

5. மின்சார உற்பத்தி ஆற்றின் உதவியால் நடை பெறுகிறது.

6. மக்கள் நீராடவும், துணிகள் கழுவவும், ஆறு பயன்படுத்தப்படும். விஞ்ஞானச் செயற் பாட்டினால் ஆறுபயன்படும். மெய்ஞ்ஞான நெறியில் உலகியலில் மக்கள் அமைதி, சாந்தி, ஆனந்தம் காணவும். உயிரோடு இசைந்த ஆத்மீக நெறியில் உயிர் உய்தியடையவும் ஆறுபோன்ற சமயம் பல்துறைகளில் மனித இனத்துக்குப் பக்குவம் அளித்து, புனித வாழ்வுக்கு ஆற்றுப்படுத்துகிறது. இதிலே சைவசமயம் வற்றாத நதியாக, தொடரும் ஜீவ நதியாகி காலா காலமெல்லாம் கட்டி வளர்க்கிறது மக்களை. இறைவன் ஒன்று, உடனியங்கும் சக்தி இரண்டு, உலகம், உயிர், ஆணவம் கன்மம் மாயையில் அலைப்புணாமல் அவற்றினின்றும் வெளிப்பட, சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்கள் வழி தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பவற்றை அறிமுகம் செய்திருக்கறது. அஞ்செழுத்துண்மை, திருநீற்றுமகிமை, உருத்திராட்சச் சிறப்புப் பற்றி அனுசரிக்கும் பாகத்தை அறைந்துள்ளது. காமகுரோத லோப மோக மதமாற்சரியங்கள் பற்றி ஆறுகட்டளைகள் தந்திருக்கிறது. ஆலயம், அடியார், பெருமை பேசுகிறது. வளமான வாழ்வினால் உளம் செழித்து நிம்மதிகாணும் போதும் சரியான தடத்திற் செல்லும்படி ஆற்றுப்படுத்துகிறது. போக போக்கியங்கள் தனு, கரண, புவனம் பற்றிச் சரியான விளக்கம் தந்து சிந்தித்துச் செயற்பட்டு உய்தி காணுங்கள் என உயிர் கடைத்தேறக் கை கொடுக்கிறது. ஆக நம்சமயமான சைவம் சிவத்தோடு தொடர்புடையது. எனவே நாம் சமய வாழ்வை அனுசரிப்பது நம்கடமையாகும்.

*சைவ சமயமே சமயம் சமயாதீதப்பழம் பொருளைக்*

*கைவந்திடவே மன்றுள் வெளி காட்டுமந்தப்*

*பொய்வந்துழலும் சமய நெறி புகுதவேண்டா முத்திதரும்*

*தெய்வ சபையைக் காண் பதற்குச் சேரவாரும் ஜெகத்தீரே*

*தாயுமானவர்.*

# சிவாலய தரிசனம்

- வித்துவான். வ. செல்லையா -

சைவ சமயத்தவர்களாகிய நாங்கள் சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபட்டு வருகின்றோம்.

விநாயகப் பெருமான், வயிரவப்பெருமான், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக்கடவுள், சிவபெருமானின் மூர்த்தங்களே ஆவர். இவர்களை எம்பெருமானின் திருக்குமாரர்கள் என்று கூறுவது உபசார வழக்காகும்.

திருக்கோவில் இல்லாத ஊர் திருவிலூர். ஆகவே அது அடவி காடே என்று பெரியோர் கூறியுள்ளனர். திருக்கோவில்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவது மக்களாகிய நமக்கு வேண்டியதொன்றாகும். தேவர்கள் கூட மண்ணில் வந்து பிறவாது அவமே காலத்தைப் போக்குகின்றோம் என்று வருந்துகின்றனர். ஏன்? மண்ணினிற் பிறந்தார் மதிசூடும் அண்ணலாரை வழிபடும் பாக்கியம் பெற்றமை ஒன்றேயாகும்.

ஆலயம் என்பது ஆ + லயம் என்றாகும். ஆ என்பது ஆன்மா. லயம் என்பது ஒடுங்குதல். ஆகவே ஆலயம் என்பது ஆன்மா ஒடுங்குமிடம் ஆகும். அங்ஙனமான ஒரு இடம் நாம் வழிபட்டு முத்தியின்பம் பெற வாய்ப்பானது.

''நாம் இச்சரீரம் எடுத்ததன் நோக்கம் இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்'' என்ற நாவலர் வாக்கினைச் சிந்திப்போமாக.

ஆலயம் என்றால் சிவாலயத்தையே குறிக்கும் ''யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்'' என்ற வாக்கினையும் நினைக்கற்பாலது.

சிவலாய தரிசனம் நமக்கு இன்றியமையாது வேண்டியது, அங்கு தரிசனத்துக்குச் செல்ல வேண்டிய நாங்கள், செல்லுமிடச் சிறப்பை நோக்கி நாம் எப்படிச் செல்ல வேண்டும்; எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பவற்றைத் தெரிந்து கொள்வது மிக வேண்டியதாகும்.

சிவபெருமானை வழிபடுதற்கு உரிய முக்கிய இடம் திருக்கோயில் ஆதலின் அங்கு செல்வதற்கு முன் ஸ்நானஞ் (குளித்தல்) செய்து கொள்ளல் வேண்டும். தோய்த்து உலர்ந்த வஸ்திரந்தரித்து விபூதி தரித்துக் கொண்டு செல்லுதல் வேண்டும். சிவ தீட்சை பெற்றவர்கள் (சந்தியாவந்தனம்) அனுட்டானஞ் செய்து கொண்டு செல்தல் வேண்டும் நாம் உரிய காலத்தில் சிவதீட்சை பெற்றாக வேண்டும். அங்ஙனம் பெறாதவர் நாமமது சைவர் அன்றி, சைவர் அல்லர். திருக்கோவிலுக்குப் போகும் போது வெறுங்கையோடு போகக் கூடாது. வெறுங்கையோடு போகக் கூடாத இடங்கள் பல. அவை திருக்கோவில், சிறுவரிடம், வயோதிபர்களிடம், தாய் தந்தையரிடம், நோயாளிகளிடம், குருவிடம் என்பன.

திருக்கோவிலுக்குச் செல்லும் போது ஒரு தட்டில் மலர்கள், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், சூடம் என்பனவும் விசேட காலங்களில் அபிஷேகத் திரவியங்களும் எடுத்துச் செல்லலாம். அர்ச்சனைத் தட்டை அரைக்குக் கீழ்த் தொங்கவிட்டுக் கொண்டு செல்லக் கூடாது.

ஆலயத்துக்குச் செல்லும் போது ஆலயக் கோபுரத்தைக் கண்டதும் அதனை வணங்கி அப்பால் செல்ல வேண்டும். 'கோபுரம் தூலலிங்கம்' என்று கூறப்பட்டுள்ளது. 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்' என்பதனையும் மனதில் வைத்துக் கொள்வது நன்று.

ஆலயத்துட் செல்லுமுன் வீதியில் உள்ள கிணற்றிலாவது, திருக்குளத்திலாவது கை கால் முகங்களைக் கழுவிக் கொண்டும் கையில் கொண்டு செல்லும் சிவத்திரவியங்களை நீரால் புரோட்சித்துச் சுத்தி செய்து கொண்டும் ஆலயவாசலில் அல்லது கோபுரவாசலில் உள்ள துவார பாலகர்களை வணங்கிக் கொண்டு உள்ளே செல்லல் வேண்டும்.

திருக்கோவிலினுள்ளே சென்றதும் பலிபீடத்துக்கு இப்பால் நின்று வணங்கல் வேண்டும். பலிபீடம் பத்திரலிங்கம் என்று கூறப்படுகின்றது.

கிழக்கு நோக்கிய சந்திதானத்திலும் மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும் வடக்கே தலைவைத்து வணங்க வேண்டும். தெற்கு நோக்கிய சந்நிதானத்திலும் வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும் கிழக்கே தலைவைத்து வணங்குதல் வேண்டும். கிழக்கிலும் வடக்கிலும் கால் நீட்டி நமஸ்காரம் பண்ணலாகாது.

ஆடவர்கள் அட்டாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணல் லேண்டும்.

அட்டாங்க நமஸ்காரமாவது:

தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு ஆக எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது:

தலை, கையிரண்டு முழந்தாள் இரண்டு ஆகிய ஐந்து, அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்கல். இந் நமஸ்காரங்கள் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும் செய்தல் வேண்டும். ஒரு தரமாயினும், இரண்டுதரமாயினும் இதனைச் செய்தல் பாவமாகும். நமஸ்காரம் பண்ணிய பின்பு பிரதகூஷிணம் செய்தல் வேண்டும். இதனை வீதி சுற்றிக் கும்பிடுதல் என்றும் கூறுவர்.

பிரதகூஷிணம் மூன்றுதரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும். பிரதகூஷிணம் பண்ணும்போது இரண்டு கைகளையும் மார்பிலேனும் சிரசிலேனும் கூப்பிக் கொண்டும் சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டும், தேவாரங்களைப் பாடிக் கொண்டும், கால்களை மெல்ல வைத்து வலம் வருதல் வேண்டும்.

சுவாமி தரிசனஞ் செய்யும்போது முதலில் விக்கிநேஸ்வரரைத் (பிள்ளையாரைத்) தரிசனம் செய்து, பின் சிவலிங்கப்பெருமானையும் உமாதேவியாரையும் தரிசனஞ் செய்து (விபூதி வங்கித்) அதன்பின் சபாபதி, தகூஷிணாமூர்த்தி, சோமஸ்கந்தர், சந்திசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளைத் தரிசனஞ் செய்தல் வேண்டும். சிவாலயங்களுக்கே இவை பொருந்தும். ஏனைய ஆலயங்களில் விக்கி நேஸ்வரரை முதலில் தரிசனஞ் செய்து கொண்டு பின்னர் மூர்த்திமுறை ஒழுங்கில் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

விக்கிநேஸ்வரரைத் தரிசிக்கும்போது முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி வலக்காதை இடக்கையாலும் இடக்காதை வலக்கையாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும்.

சந்நிதானங்களில் தரிசனஞ் செய்யும் பொழுது இரண்டு கைகளையும் சிரசிலேனும் மார்பிலேனும் குவித்துக் கொண்டு மனங் கசிந்து உருகித்

தோத்திரஞ் செய்தல் வேண்டும். அபிஷேகம், நிவேதனம் முதலியவை நடக்கும் பொழுது தரிசனஞ் செய்யலாகாது.

தரிசனம் முடிந்தவுடன் சண்டேஸ்வரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டு, மூன்றுமுறை கைகொட்டிச் சிவதரிசன பலத்தைத் தரும்படி பிரார்த்தித்தல் வேண்டும்.

சண்டேஸ்சுவரதரிசனம் முடிந்ததும் விபூதி வாங்கித் தரித்து சந்நிதானத்தில் அமைதியான ஒரு இடத்தில் அமர்ந்து இறைவனைத் தியானித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் இயன்றளவு (108) உருக் செபித்துக் கொண்டு எழுந்து வீடு திரும்புதல் வேண்டும்.

நித்தியமும் நியமமாகச் சென்று ஆலய தரிசனஞ் செய்தல் வேண்டும். அங்ஙனம் சென்று வழிபட வாய்ப்பில்லாதோர் சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, சந்திர சூரிய கிரகண காலம், சிவராத்திரி, மாசப்பிறப்பு, வருடப்பிறப்பு, தைப்பொங்கல், நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களிற் சென்று வழிபட வேண்டும்.

திருக்கோவில்களிற் செய்யத் தகாத குற்றறங்கள் பல உண்டு. அவற்றை அறிந்து தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்விடங்களில் ஆசாரியர்கள், கோவில் அர்ச்சகர்கள், ஆலய நிர்வாகிகள் என்போர் தாமும் அங்ஙனம் ஒழுகி வழிபடுபவர்களை வழிப்படுத்தல் வேண்டும்.

திருக்கோவில்களில் செய்யத்தகாத குற்றங்கள்:– ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், ஆசனத்திருத்தல், நித்திரை செய்தல், காலை நீட்டிக் கொண்டு இருத்தல், மயிர்கோதி முடிதல், சூதாடல், பாக்கு வெற்றிலை யுண்ணல், சிரசிலே வஸ்திரம் தரித்துக் கொள்ளல், தோளிலே உத்தரியம் இட்டுக் கொள்ளுதல், சட்டை போட்டுக் கொள்ளுதல், பாதரக்ஷை யிட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துவதஸ்தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னுமிவற்றின் நிழலை மிதித்தல், வீண் வார்த்தை பேசல், சிரித்தல், சண்டையிடல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல் முதலானவைகளாம்.

*நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி என்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்*
*ஆரூரா வென்றென்றே அலறா னில்லே.*

இம்மனித சரீரம் பெறுதற்கு அரியதாதலாலும், இது இக்கணம் இருக்கும் இக்கணம் நீங்கும் என்று அறிதற்கு அரிதாகிய நிலைமையையுடைய தாதலாலும் நாம் இடையறாது எக்காலமும் சிவபெருமானிடத்தில் அன்பு செய்தல் வேண்டும்.

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் -

# திருமுறைப் பண்ணிசை

- ஞானசிரோன்மணி பண்டிதர் ஆர். வடிவேல் -

தமிழிசைப் பண்களின் தோற்றமும் வளர்ச்சியும் கிறிஸ்துவுக்குமுன் பல்லாண்டுகளுக்கு முன்பாகவே இருந்தன. என்பதை மொகஞ்சதாரோ, சங்குதாரோ, ஹரப்பா நாகரீக வரலாற்றின் மூலமும், சங்க இலக்கியங்கள் மூலமும், குறிப்பாகப் பரிபாடல், சிலப்பதிகாரம், திருக்குறள் தொல்காப்பியம் ஆகிய நூல்களிற் காணப்படும் தரவுகள் மூலமும் அறியக் கிடைக்கின்றது.

*"பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல் கண்ணென்னாம்*
*கண்ணோட்ட மில்லாத கண்"*

என்று திருக்குறள் கூறுகின்றது.

பாடலுக்கு இயைந்தவகையில் இசை அமையும் போது அது பண்ணோடிசைந்த பாடலாகின்றது. இயைபு என்ற பதம் பாடலின் இசை, சுவை, லயம், பொருட் செறிவு என்பனவற்றை உணர்த்துகின்றது.

*"பண்ணும் பதமேழும் பல ஓசைத் தமிழவையும்*
*உண்ணின்றதோர் சுவையும் உறு தாளத்தொலி பலவும்"*

என்ற தேவாரத்தில் ஞானசம்பந்தர் பண்ணமைதி பற்றிய வரைவிலக்கணத்தைத் தருகின்றார்.

சொல்லக் கருதிய கருத்துக்களை கேட்போர் விரும்பி ஏற்றுக்கொள்ளும் வண்ணம் இனிய ஓசையோடு கூடிய சொற்களாற் புலப்படுத்துவது இசைத்தமிழ். "இசையானது நரம்படைவால் உரைக்கப்பட்ட 11991 ஆதி இசைகள்" எனச் சிலப்பதிகார உரையாசிரியர் கூறுகின்றார்.

இயற்பாவினோடு இயைத்துரைக்கப்பட்ட இசையினை நெஞ்சு, கண்டம்., நா, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை என்னும் எட்டிடங்களிலும், எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல் குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண்வகைத் தொழில்களால் உருவாகப் பண்ணிச் சீர்ப்படுத்திப் பாடப்படுவது பண்ணாதலின், பண்ணென்பது காரணப் பெயராயிற்று, என்று சுவாமி விபுலானந்த அடிகளார் யாழ்நூலிற் கூறுகின்றார்.

தேவார முதலிகளாகிய மூவரும் அருளிச் செய்த திருமுறைகளிற் காணப்படும் பண்களே பண்டைத் தமிழிசை நூல்களிற் கூறப்பட்ட பண்களாகும். இவர்கள் பண்டைத் தமிழிசை மரபுவழிநின்று பண்ணமைதியோடு திருமுறைகளைப் பாடியருளினார்கள்.

மூவர்தமிழ் என்று போற்றப்பட்டு வரும் சைவ இலக்கியங்கள் முதலாகப் பெரியபுராணம் ஈறாகவுள்ள பாடல்களை நம்பியாண்டார் நம்பி வகுத்துப் பன்னிரு திருமுறைகள் என்று தொகுத்துத் தந்தார்.

திருமுறைகள் என்றபதம், திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பிக்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திரத்திற் காணப்படுகின்றது.

"ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே"

திருமந்திரம் 1067

மேற்கூறிய பாடலில் திரிபுரை என்ற சக்தியானவள் கையில் ஏடு தாங்கியவளாய்த் திருமுறையைப் பாடிக்கொண்டிருக்கிறாள், என்று கூறுகின்றார். திருமுறை என்ற சொல் உயர்ந்த அறிவு நூல்களைக் குறிப்பதாகும். பன்னிரு திருமுறைகளும் உயர்ந்த ஞான நூல்கள் தானே!

சிவபூசைபற்றித் திருமூலர் கூறும் மற்றொரு மந்திரமும் திருமுறையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

*"வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்*
*காட்டவும் நாமிலம் காலையும் மாலையும்*
*ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்*
*பாட்டவி காட்டுதும் பாலவி யாகுமே"*

திருமந்திரம் 1793

வேட்டவி என்பது அந்தணர்கள் செய்யும் வேள்விகளில் இடப்படும் நெய்முதலிய ஆகுதிகள். இதனையே ஞானசம்பந்தர் பறப்பைப்படுத்து எங்கும் பசுவேட்டு எரியோம்பும்" என்று கூறினார். பசு என்பது இங்கு நெய்க்கு ஆகுபெயராயிற்று. இத்தகைய வேள்விகளைச் செய்ய எல்லோராலும் முடியாமையால், பாட்டவி – திருமுறைப் பாடல்களாகிய அவியை காலையும் மாலையும் பாலவியாக நிவேதிக்கலாமே என்பது திருமூலர் கூற்று; இதனையே

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவுக்கரையரும்
பாடிய நற்றமிழ் மாலை, சொல்லியவே சொல்லி
ஏத்துகப் பானை"

என்று நம்பியாரூரர் அருளிச்செய்த செந்தமிழ்த் திருமுறையினாலும் அறியலாம்.

பதினாறாம் நூற்றாண்டுக்குப் பின்னர், தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்திலும் கர்நாடக இசை வளர்க்கப்பட்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் திருமுறைகளுக்கான பண்ணிசை பின்தள்ளப்பட்டதை வரலாறுகள் கூறுகின்றன.

கர்நாடக சங்கீதத்துக்கு முற்பட்டது. திருமுறைப் பண்ணிசை. இடைச்சங்க காலத்தில் பாடப்பட்ட பரிபாடல் என்ற நூலிலுள்ள எழுபது பாடல்களில் இப்போது கிடைத்திருக்கும் இருபத்திரண்டு பாடல்களுக்குப் பாடியவர் பெயரும், பண்ணின் பெயரும், இசைவகுத்தவர் பெயரும் கூறப்பட்டுள்ளன. அவர்கள் வகுத்த இசைமுறையும் அம்முறைபற்றிய இசைக் குறிப்புகளும் இக்காலத்திற் கிடைக்கவில்லை.

பண்டைக் காலத்திலிருந்த இசைத்தமிழ் நூல்களாகிய பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு, பரத சேனாபதீயம், முதலிய இசைக் கலை நூல்களும் குமரிக்கண்ட அழிவின்போது அழிந்து விட்டன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திற் பண்டைத் தமிழிசை பற்றிய அரிய குறிப்புகள் கிடைக்கின்றன. சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் மேற்கூறிய இசைஇலக்கண நூல்களிலிருந்து பல மேற்கோள்களைச் சிலப்பதிகாரத்தில் தருகின்றார்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கும் 5ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி தமிழக வரலாற்றில் இருண்ட காலம் எனப்படுகிறது. தமிழர்களது வாழ்க்கையோடு தொடர்பில்லாத வேற்றுச் சமயவாதிகளால் தமிழர்களின் வாழ்வும் இசையும் நலிவுற்றன. களப்பிரர் காலம் எனப்படும் இக்காலப்பகுதியில் பண்டைத் தமிழிசை அருகி மறையத் தொடங்கியது. பாணர்கள் எனப்படுவோர் பண்ணிசையை வாய்மொழியாகப் பேணிக் காத்தனர். இக்காலப்பகுதியில் வாழ்ந்த காரைக்காலம் மையாரியற்றிய கோயில் மூத்த திருப்பதிகம் நட்டபாடைப் பண்ணிலும், அற்புதத் திருவந்தாதி

இந்தளம் என்ற பண்ணிலும் பாடப்பட்டிருப்பதினால் பண்டைக்காலப் பண்ணிசையின் தொன்மை புலப்படுகின்றது.

7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம் பந்தரும் நாவுக்கரசரும் பண்டைத் தமிழிசை மரபையொட்டிய இசைத்தமிழ் இலக்கியங்களைப் படைத்தனர். இந்த அருளாளர்களின் பண்ண மைதியுடைய திருமுறைப் பதிகங்கள் பண்டைத் தமிழிசை மரபைப் பேணத் தொடங்கின. இக்காலத்தில் திருவெருக்கத்தம்பூரில் வாழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனையாள் மதங்கசூளாமணி அம்மையும் சீர்காழிக்கு வந்து ஆளுடைய பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களை யாழில் வாசித்துப் பாடித் தமிழ் நாடெங்கும் பண்ணிசையை வளர்த்தனரென்பது வரலாறு.

9ஆம் நூற்றாண்டுக் கால கட்டத்தில் சுந்தரரும், திருப்பாணாழ்வாரும் தமிழிசை மரபினைப் பேணிப் பண்ணோடு பயின்ற பதிகங்களைப் பாடினர். இவர்களையடுத்து இசைப்பாணராகிய பாண பத்திரனும், ஆனாய நாயனாரும் தொன்மைத் தமிழிசைப் பண்களைப் பேணிப் பாதுகாத்தனர்.

இறைவனுக்குப் பிரீதியான இன்பத் தமிழ்ப் பண்களைச் சம்பந்தரும், நாவுக்கரசரும் பாடிய பண்ணமைதியை அனுசரித்தே சுந்தரரும் பாடினார். எனினும் பத்தாம் நூற்றாண்டிற் பண்ணிசை பேணுவாரற்று நலிவுற்றது.

11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார், நம்பி, திருநாரையூரில், ஆதிசைவ குலத்தில் பிறந்தவர். இவர் குழந்தைப் பருவத்தில் அவ்வூரிலுள்ள பொல்லாப்பிள்ளையரை வழிபட்டு அவனருளால் ஞானத்தைப் பெற்றவர். இவர் அப்பொழுது சோழநாட்டை ஆண்ட இராசராச சோழனின் வேண்டுகோட்படி பொல்லாப்பிள்ளையார் அருளால் மூவர் தேவாரப்பதிக ஏடுகள் சிதம்பர திருக்கோவிலில் இருப்பதையறிந்து அவற்றை எடுத்துத் திருமுறைகளாக வகுத்தார்.

ஞானசம்பந்தர் அருளிச் செய்த திருக்கடைக் காப்புப் பதிகங்கள் 1, 2, 3 திருமுறைகள். அப்பர் அருளிய தேவாரங்கள் 4, 5, 6 ஆம் திருமுறைகள். சுந்தரர் அருளிய திருப்பாட்டு 7ஆம் திருமுறை. இவையெல்லாம் பிற்காலத்தில் தேவாரங்கள் என்ற பொதுப் பெயரால் வழங்கி வருகின்றன. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் 8 அம் திருமுறை; திருமாளிகைத் தேவர் முதலாக ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாவும், சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டும் 9ஆம் திருமுறை. இவைகள் பண்ணமைதியோடு பாடப் பட்டிருக்கின்றன. திருமூலர் அருளிய திருமந்திரம் 10ஆம் திருமுறை. திருவாலவாயுடையார் திருமுகப் பாசுரம் முதலாக நம்பியாண்டார் நம்பியருளிய திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை ஈறாகவுள்ள நூல்கள் நாற்பதும் 11ஆம் திருமறை. இவற்றுள் காரைக் காலம்மையார் பாடிய சில பதிகங்கள் பண்ணமைதியோடு பாடப்பட்டுள்ளன. பதினோராம் நூற்றாண்டில் இராசராச சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் அருளிய பெரிண புராணம் அநபாயசோழன் காலத்தில் 12 ஆம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

தெய்வஞ் சுட்டிய வாரப் பாடல் தேவாரம் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் இறைவனது திருவருளால் இன்சொற்படுத்தியும், இன்னிசைப் படுத்தியும் அருளிய பாடல்களே தேவாரம் என்ற பெயராற் போற்றப்படுகின்றன. இத்தேவாரப்

பதிகங்களும் இவற்றின் பண்ணமைதியும் இடைக் காலத்திற் போற்றுவாரின்றி அருகி மறையும் நிலையிலே இறைவனருளால் நம்பியாண்டார் நம்பியின் பேராதரவுடன் திருமுறைகளைத் தொகுப்பித்த மன்னன் திருமுறை கண்ட சோழன் என்னும் சிறப்பும் பெயர் பெற்றான். இம் மன்னன் தில்லைச் சிற்றம்பலவனுடைய அருளால் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினியாரை அழைத்து வந்து தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணமைதியினை வகுத்தமைத்தானெனத் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது.

பிற்காலத்திற் கீழ்வேளூர் சொக்கலிங்க தேசிகர் நெறிப்படுத்திய பண்ணிசை மரபு இப்போது ஆதீனங்களாலும், ஓதுவா மூர்த்திகளாலும் பேணப்பட்டு வருகின்றது.

திருமுறைப் பண்ணிசையின் தனித்துவத்துக்கு நான்கு சிறப்பம்சங்கள் கூறப்படுகின்றன.

1. தேவார இசை, மணியும் ஒளியும் போல மொழியிலிந்து வேறுபட்டுப் பிரிவதில்லை.

2. இறையனுபூதி பெற்ற தேவார ஆசிரியர்கள் திருமுறைகளை அருளிச் செய்தார்கள். அவைகள் தெய்வப்பாடல்கள். வெறுங் கவிதைகளல்ல.

3. திருமுறைப் பண்ணிசை தொன்மையானது. இன்னபண்ணுக்கு இன்ன இராகமென வரையறுக்கப்பட்டுளது.

4. இறைவழிபாட்டின் அங்கமாயிருப்பது பூவும் நீரும் தூபதீபமும் போல பண்ணிசையும் நிவேதிக்கப்படுவது.

திருமுறைப் பண்களிற் பகற்பண்கள் 13. இராப் பண்கள் 9. பொதுப் பண்கள் 3 எனவும் ஆதீனங்களும் இசையாசிரியர்களும் வகுத்துள்ளனர். இவை விரிக்கிற் பெருகும். விரிவஞ்சி விடுத்தாம். பண்களுக்குரிய இராகங்களையறிந்த ஓதுவா மூர்த்திகள் பயபக்தியோடு பாடித் தேவாரப் பண்ணிசையைப் பேணுவார்களாக.

ஆலயங்களும், அறங்காவலர்களும் பராமுகமாயிந்தால் திரைப்படப் பாடல்கள் பண்ணிசையின் காலைவாரி விட்டுவிடும் என்பதை நினைவிற் கொள்வோமாக.


எத்தனையோ துன்பத்திற்குள்ளும் தன் தவவலிமையைப் பெருக்கித் தன் சத்தியால் மக்களின் தீராத நோய்களையும் ஓயாத பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கிறார் ஸ்ரீ நாக தேவ சுவாமிகள்

ஸ்ரீ நாகதேவ சுவாமிகளின் பார்வை பட்டு வாழ்வு பெற்றோர் ஏராளம்.

தன் சக்தியால் மக்களின் நோய் நொடிகளைப் போக்கி, அவர்களுக்கு அன்பும் ஆதரவும் அளித்து அருள்பாலிக்கும் ஸ்ரீ நாகதேவ சுவாமிகளைத் தரிசித்து அவர் அருளை ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளுங்கள்

ராஜகுரு சேனாதிபதி கனகரெட்னம்

# நேச நாயனார்

## திருநாள் - பங்குனி - உரோகிணி

*- சிவ சண்முகவடிவேல் -*

உலகத்தில் வளர்புகழ் மிக்கது காம்பீலிநகர். காம்பீலி பழமையான நகராகும். சிறப்புக்கள் பல மன்னியது. அந்நகர் வாழ்வோர் குறைபாடில்லாத ஒழுக்கத்தைப் பேணுபவர்கள். அன்பு வளர் சிந்தையர்கள். குன்றாத வாய்மையைக் கடைப்பிடிப்பவர்கள். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் தங்கி வாழ்பவர்.

காம்பீலி நகர் மதிநிலா தோயும் சோலைகள் உயர்ந்து விளங்குவது. சிகரங்கள் பொருந்திய மாடங்கள் நிறைந்திருப்பது.

நேசர் அந்நகரில் வாழ்பவர். சாலியார் குலத்தில் தோன்றியவர். அறுவையர் தொழில் மரபில் மேம்பாடு பெற்றுள்ளார்.

சிவபிரான் சர்ப்பத்தை ஆபரணமாக அணிபவர். நேசனார் சர்ப்பாபரணரிடத்தில் ஆரா அன்பு பூண்டவர். சிவனடியார்களுடைய பணிகளைச் சிரமேற் கொள்ளும் குறிக்கோளாளர். அவர்கள் பாதங்களைத் தலைமேற் தரிப்பவர். புகழும் சிவஒளியும் திசை விளங்கத் திகழ்வார்.

நேசனார் ---

மனத்தைச் சிவபிரான் திருவடி மலருக்கு ஆக்கினார். மறவா மனம் உடையராயினார்.

வாயைச் சிவப்புகழ் வாழ்த்த வைத்தார். நா நாளும் நம்பன் நாமம் நவிலும்.

தாங்கும் கைகளைச் சிவனடியார் பணிக்குப் பாவித்தார். கரம் தரும் பயன் இது எனக் கொண்டார். அடியார்களுக்கு உதவ ஆடை நெய்வார். கீளாடையோடு பழுதில் கோவணமும் நெய்வார்.

*"ஆங்கவர் மனத்தின் செய்கை யரனடிப் போதுக் காக்கி*
*ஓங்கிய வாக்கின் செய்கை யுயர்ந்தவஞ் செழுத்துக் காக்கித்*
*தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க் காகப்*
*பாங்குடை யுடையுங் கீளும் பழுதில்கோ வணமுநெய்வார்."*

அந்நிகழ்வை இவ்வாறு செஞ்சொல்லால் நூல் இழைப்பார் அஞ்சொற் பாவாணர் அருண்மொழியார்.

ஆடை
கீளாடை
கோவணம்

சிவனடியார்கள் எதை விரும்புவார்களோ அதை அன்போடு அளிப்பார், நேசனார்.
சிவனடியார்களுக்கு வேண்டுமாறு கொடுப்பார்
சிவனடியார்களுடைய மலரடிகளை வழுத்துவார்.
சிவனடியார்களைப் போற்றிப் புகழ்வார்.
நேசனார் நற்றொண்டு பந்த பாசங்களைப் பாற்றியது.
தெண்ணிலா மலர்ந்த வேணியார் திருவடி நீழலை எய்தினார்.
நேசனார் பேரின்பப் பெருவாழ்வில் உற்றார்.

# திருத்தோணோக்கம்

- பண்டிதர் சி. அப்புத்துரை -

## வரலாறு:

சாதாரண உலகியல் வாழ்வுடன் தொடர்புடைய கிராமிய விளையாட்டுக்களையும் தெய்வீக சிந்தனைக்குள்ளாக்கும் மணிவாசகசுவாமிகளது செயலழகை இங்குங் காண்கின்றோம். தோணோக்ககம் – தோள் + நோக்கம். அது தெய்விக உணர்வைத் தருவதாகிய 'திரு' வென்னும் அடையுடன் சேர்ந்து திருத்தோணோக்கம் என நின்றது. திருத்தோள் நோக்கம் என்றது ஒருவர் தோளை மற்றொருவர் கடைக்கண்ணாற் பார்க்க முயன்றாடும் ஆட்டம் போன்றதோர் மகளிர் விளையாட்டு என்பர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள். இழிந்த மகளிராய கூத்தியர் தம் வேந்தன் அடைந்த வெற்றித் திறனை அவன் முன்னர் நகைச்சுவை தோன்றக் கைவீசித் தமது காதலைப் புலப்படுத்த ஆடும் ஆட்டமாகும் என்பர் பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்.

நோக்கு என்பது கூத்து. விநோதக் கூத்துக்களின் பகுதிகளில் அது ஒன்று என்பதை,

*"குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய*
*கரணம் நோக்குத் தோற்பாவைக் கூத்து*
*என்றிவை யானும் நகைத்திறச் சுவையும்*
*வென்றியும் விநோதக் சுத்தென விசைப்ப"*

என்னுஞ் சிலப்பதிகார மேற்கோட் செய்தி உறுதி செய்கின்றது. நோக்கு என்னுங் கூத்தானது பாரமும், நுண்மையும், மாயமும் முதலாயவற்றையுடையது." என்பர் அடியார்க்கு நல்லார். தோணோக்கம் தோள் வீசி ஆடப்படுவதொரு கூத்து. "எண் டோள் வீசிநின் றாடும் பிரான்தனை" என்னுந் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பகுதியானும் இக்கருத்து உறுதிப்படுத்தப் படுகின்றது.

நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா என்னும் பாவகையானமைந்த பதினான்கு திருப்பாடல்களை உடையது இப்பதிகம். பிரபஞ்ச சுத்தி என்பது இப்பதிகத்தின் திரண்ட பொருட் பேறெனத் திருவாசகத் திருவுள்ளக்கிடை குறிப்பிடும். பிரபஞ்சம், கானல்நீர் போன்று பொய்மையானது என்பதை உணர்த்திப் பொய்யிலா மெய்யாகிய பரமேஸ்வரனை உணர வைப்பது.

இப்பதிகத் திருப்பாடல்கள் குறிப்பிடுவன:

★ "திருநடஞ்செய் கூத்தா உன்சேவடி கூடும் வண்ணம்", என்பது கொண்டு திருவடிப் பேறு கிடைத்தலால் அடையும் இன்பச் செய்தியும்,

★ "விளவெறிந்தான் பிரமன் காண்பரிய... அம்பலவன் குணம் பரவி" என்பது கொண்டு அம்பலவன் திருவடி வணக்கந் தரும் உயர்வும்,

★ "செருப்புற்ற சீரடி வாய்க் கலசம் ஊனமுதம் விருப்புற்று வேடனார்... மெய் குளிர்ந்தங்கு அருள் பெற்று நின்றவா..." என்பது கொண்டு இறைவன் உண்மை அன்பினர்க்கு அருள் புரிபவன் என்பதும்,

★ "கற்போலும்.... என் நெஞ்சினுள்ளே புகுந்தருளி நற்பாற்படுத்து.... சொற்பால தானவா" என்பது கொண்டு இறைவன் பேரருட்டிறம் உடையவன் என்பதும்,

★ "உலகே மௌனத் திசை பத்தெனத் தான் ஒருவனுமே பலவாகி நின்றவா" என்பது கொண்டு இறைவன் எல்லாப் பொருள்கள் இடமாகியும் நிற்பவன், என்பதும்.

★ புல்லறிவிற் பல்சமயம் தத்தம் மதங்களிற் தட்டுளுப்புப் பட்டுநிற்கச் சித்தம் சிவமாக்கி.... தவமாக்கும்" என்பது கொண்டு சித்தத்தைச் சிவமாக்க வல்லவன் இறைவன் என்பதும்,

★ "சிவகருமம் சிதைத்தானைச் சாதியும் வேதியன் தாதை தாளிரண்டுஞ் சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழ" என்பது கொண்டு சிவபூசை பேரின்பந் தருவது என்பதும்,

★ "வார்கழலே நினைந்தடியோம் ஆனந்தக் கூத்தன் அருள்பெறில் மானமழிந்தோம்; மதி மறந்தோம்" என்பது கொண்டு சுய நினைவற்று மகிழ்வாயிருக்க வேண்டும் என்பதும்,

★ "எண்ணுடைய மூவர் இராக்கதர்கள் எரி பிழைத்துக் கண்ணுதல் எந்தை கடைத்தலையின் நின்றதற்பின்" என்பது கொண்டு இறையருள் பெற்றோர்க்கு அழிவில்லை என்பதும்,

★ "ஆயிரம் பூவினில் ஓர்பூக்குறையத் தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலும் சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கருளியவாறு" என்பது கொண்டு சிவபூசை செய்வோர் பயன் பெறுவர் என்பதும்,

★ "காமன்... காலன்... காய்கதிரோன்... நாமகள்... எரி... சோமன்.... தக்கன்... எச்சன்" முதலியோரைத் தண்டித்துத் தூய்மை செய்தான் என்பது கொண்டு இறைவன் தூய்மைப் படுத்துவதற் கிடமாய தண்டனை இவ்வாறானது என்பதும்.

★ பிரமன் அரியென்றிருவரும்.... பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க" என்பது கொண்டு இறைவனது அளப்பரிய பெருமையும்,

★ எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கி றைத்தேன் பரம்பரனைப் பணியாதே" என்பது கொண்டு இறைவனைப் பணிந்து வாழ்வுப் பயனை அடைதல் வேண்டும் என்பதும்,

★ "உத்தமன் வந்து உளம்புகலும் கரைமாண்ட காமப் பெருங் கடலைக் கடத்தலும்" என்பது கொண்டு இறைவன் அருளாட்சி கிட்டும் போது உலகத் துன்பியலில் நின்றும் நீங்கலாம் என்பதும் பெறப்பட்டன.

இப்பதிகத்தே இடம் பெற்றுள்ள வரலாறுகள் :

1. கன்றால் விள வெறிந்த கதை. (2)

ஆயர்பாடியில் கண்ணன் யசோதை மைந்தனாக வளர்ந்த போது மாமன் கம்சன் இராக்கதர் இருவரை ஏவிக் கண்ணனைக் கொலை செய்யத் தூண்டினான். அவர்களுள் ஒருவன் விளமரமாகி நிற்க மற்றவன் பசுக்கன்றாகிக் கண்ணனுக்கு அண்மையாக வருகின்றான். சூழ்ச்சியை உணர்ந்த கண்ணன் கன்றைத் தூக்கி விளாத்திமீது வீசினான். கன்றும் வீழ்ந்திறந்தது. மரமும் வீழ்ந்து சிதைந்தது, என்பது செய்தி.

2. கண்ணப்பர் நாளாறிற் கண்ணிடந்து அப்பிய வரலாறு. (3)

வேட்டைக்குச் சென்ற திண்ணனார் பொன்முகலி ஆற்றங்கரையிற் சிவலிங்கப் பெருமானைக் கண்டு ஈடுபாடுடையவராகிப் பூசனை செய்கின்றார். சிவபெருமான்

திருமுடியிலிருந்த நிருமாலியங்களைக் காலினால் அகற்றி, வாயிற் கொண்டு வந்த நீரினை அபிஷேகித்து, சுவைத்த ஊனமுதைத் திருவமுது செய்வித்தார். சிவகோசரியார் செய்த பூசை பொருள் பற்றியது. கண்ணப்பர் செய்தது பக்தி நெறியது. திண்ணனார் என்னும் பெயருடைய வேடுவன் இறைபணி வழி கண்ணப்பனாயினார்.

3. சண்டேஸ்வரர் தந்தை காலைத் துண்டித்தமை. (7)

திருச்சேய்ஞலூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்டேஸ்வரர் இளமையில் விசாரதருமர் எனப்பட்டார். எச்சதத்தனின் பிள்ளையாகிய இவர் வேத சாத்திரங்களில் வல்லவரானார். பசுக்களை மேய்க்கும் ஆயன் ஒருவன் பசுவொன்றை அடிதது கண்டு தாமே பசுக்களை மேய்க்கத் தொடங்கினார். பசுக்கூட்டம் பெருகியது. பால் வளமும் பெருகியது. பசுக்கள் பாலைச் சொரிந்தன. சண்டேசுரர் மண்ணியாற்றங் கரையில் மணலால் சிவலிங்கம் செய்து பாலபிஷேகம் பூசனை செய்து வழிபட்டார். தவறாக உணர்ந்த தந்தை எச்சதத்தன் சிவலிங்கத்தைக் காலாற் சிதைத்தான். மைந்தன் தந்தை காலை வெட்டிவிட்டான். இறைவன் சண்டேசுவரரை ஆட்கொண்டு சண்டேசுவரர் பதவியும் கொடுத்தான்.

4. எண்ணுடை இராக்கதர் மூவர் எரி பிழைத்தமை: (9)

முப்புர தகனம் நடைபெற்றபோது மும்மலைகளாகி நின்று துன்பம் செய்தும் தப்பிப் பிழைத்த இராக்கதர், தாராக்கன், கமலாக்கன், வித்தியுந்மாலி மூவரும் சிவ அன்பில் ஊறியவர்களாய்ச் சிவபூசையில் தலை நின்றவர்கள். சிவபூசைப் பயனாக இருவர் துவார பாலகராக, மூன்றாமவர் குடமுழா வாசிப்பரானார். சுந்தரர் தேவாரம் உறுதி செய்யும் தகவல் இது. மூவரும் அழியா நிலைமை பெற்றனர் என்ப.

5. திருமால் கண்ணிடந்து சாத்திச் சக்கரம் பெற்றமை. (10)

ஆயிரம் பூக் கொண்டு நாளும் இறைவனைப் பூசை செய்பவர் திருமால். ஒரு நாள் பூசையின் போது ஒரு பூக்குறையை நிறைவு செய்ய வைராக்கிய அன்பு மிகுதியால் தங்கண்ணை இடந்து மலராகச் சாத்திக் குறைவை நிறைவாக்கினார். அந்த அன்பிற்கு ஆளாகிய சிவன் திருமாலுக்குச் சக்கரம் வழங்கினார் என்பது வரலாறு.

6. காமன் உடல், காலன் உயிர், காய்கதிரோன் பல், நாமகள் நாசி, பிரம்ன் சிரம், எரி கரம், சோமன் கலை, தக்கன் எச்சன் தலை, நீக்கித் தூய்மை செய்தமை. (11)

முருகன் தோற்றத்தைக் கருத்திற் கொண்ட தேவர்களது ஊக்குவிப்பால் மலரம்பெய்த மன்மதன் உடல் சாம்பர். ஆனமை,

சிவபூசை செய்து கொண்டிருந்த மார்க்கண்டேயர் உயிரைக் கவர முனைந்த காலன் உயிர் பறிக்கப்பட்டமை :

தக்கன் வேள்வியில் வீரபத்திரர் சூரியன் தாடையில் அடிக்க அவன் பற்கள் உதிர்ந்தமை. அதே வேள்வியில் நாமகளது மூக்கினையும் பிரமன் தலையையும் வீரபத்திரர் அரிந்து விட்டமை. அவிப் பொருளை விழுங்கும் பொருட்டுத் திரட்டிய அக்கினியின் கைகளை வெட்டியமை. சந்திரனைப் பாதங்களால் தேய்த்தமை. தக்கன், யாகதேவன் எச்சன் என் போர் தலையை அறுத்து ஆட்டுத் தலையாக மாற்றியமை முதலான செயல்கள் மூலம் அவர்கள் தூய்மை பெற்றனர் என்பது.

7.. பிரமன் அரி என்று இருவரும் தம் பேதைமையால் பரமம் யாம் பரம் என்றமையும் அரனார் அழலுருவாய் நின்றமையும்:(12)

பிரமாவுந் திருமாலுந் தமது அறியாமை காரணமாகத் தனித்தனி தாமே முழுமுதற் கடவுள் என வாதாடிய பதைப்பு நிலை ஒடுங்கும் படியாக இறைவன் அவர்கள் இடையே சோதி வடிவாகி நின்றான். சோதியின் அடிமுடி தேடிக்காண முடியாத நிலையில் அவர்கள் இறைவனை உணர்ந்தனர், பணிந்தனர் என்பது.

# உலக சைவப் பேரவை

## சர்வதேச தலைமைச் செயலகம் : இலண்டன்

தொடர்புகளுக்கு:

தலைவர் / பிரதம நிறைவேற்றுநர் : திருவருள் திரு. சிவநந்தி அடிகளார்
மே/பா இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்,
72, கிங் எட்வேர்ட் சாலை, இலண்டன் E17 6HZ, U.K

## உலக சைவப் பேரவை

சென்னையில் 29.02.92 இல், தொடங்கப்பட்டுச் சிங்கப்பூரில் 13.9.92 இல், நடந்த பேராளர் / ஆலோசகர் பொதுச் சபையில், ஒரு வரலாற்றுச் சிறப்புக் கொண்ட சர்வதேச சைவப் பேரவையாக அமைக்கப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் இலண்டனில் நிறுவப்பட்டடுள்ளது; இதன் செயற்குழுக்கள், ஏழு உலக நாடுகளில் செயலாற்றுகின்றன.

## சைவ சமய மறுமலர்ச்சிக்கான உடனடிச் செயல் திட்டம்

1. இந்து சமயம் என்ற பெயரில் பல கடவுள்களை வழிபடும் வழக்கம் பரவாமல் பாதுகாப்பது அவசியம். சிறு தெய்வ வழிபாட்டை அறவே விலக்கல் வேண்டும்.
2. வட இந்தியாவில் உள்ள முறையைப் பின்பற்றிப் புனலும் பூவுமிட்டு இறைவனை வழிபடும் உரிமை அடைதல் வேண்டும்.
3. இறைவனைத் தமிழில் வழிபாடு செய்து கொள்ளும் உரிமை நமது பிறப்புரிமை. தமிழ் வழிபாட்டு இயக்கத்தின் நோக்கம் பக்தி நெறியை வளர்ப்பதேயாகும்.
4. இன்று, திருமடங்களைச் சார்ந்து மக்கள் மன்றத்தில் உலாவரும் தொண்டர்கள் இல்லாப் பெருங்குறையைச் சைவ சமுதாயம் நீக்க வேண்டும். ஒரு கிராமத்தவர் ஒரு இளைஞரைச் சைவப்பணிக்கென ஆதரிக்க வேண்டும்.
5. முழுநேரச் சைவ சமுதாய சேவைக்காக நாடுதோறும் சிவத்தொண்டர் அணி; இந்தப் பேரவை சமய வழிப்பட்ட சமுதாயப்பணி செய்யச் சைவத் துறவிகளை, உண்டி - உறையுள் - உடை வழங்கி, உருவாக்க வேண்டும். இவ்வாறு பயிற்சி பெற்ற துறவிகள், திருக்கோயில்களில் உருவாகும் ஊர்ச் சபையின் இயக்குநர்களாக அமைவார்கள். இதனாற் சமயவழித் தொடர்பும், வழிகாட்டலும் வலுப்பெறும்.

*இன்றைய சைவ உலகின் உடனடித் தேவை : செயல், சேவை, சாதனை! சேரவாரும் சைவர்களே!*
*அன்பே சிவம்!*

*எமது 'சைவ உலகம்' தலைமை ஆசிரியர் : முனைவர் கே. லோகநாதன், 29, Jalan - 5, sangat Minden, Gelugor, 11700, PENANG, Malaysia. தமிழகம் தொடர்புக்கு*
*திரு மு. இராமலிங்கம், பி.காம்., 37, 'ஆர்' பிளாக் அண்ணாநகர், சென்னை— 600 040*
*'சைவ உலகம்' ஆண்டுக் கட்டணம் ரூ 200 தொடர்பு கொழும்பு : 591–255*

*பேரவையின் செயல் திட்டங்களையும், 'சைவ உலகம்' காலாண்டு இதழையும் ஆதரிக்குமாறு உலக சைவர்களை அன்போடு அழைக்கின்றோம்.*
*போற்றி ஓம் நமச்சிவாய*

# தர்மசாஸ்திரம்

- கே. ஆர். வாசுதேவன்-

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. வாழ்வாங்கு வாழ்வதுதான் அற நெறியாகும். ஒரு ஆத்மா அன்னையின் கர்ப்பத்தில் கருவாய் உருவாகிப் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, இறுதியில் உடலைவிட்டுப் பிரியும் வரை, எப்படி எப்படி நடக்க வேண்டும் என்று மறை நூல்கள் வழிவகுத்திருக்கின்றன. அதாவது, ஒவ்வொரு மனிதனும் தனது க்ஷேமத்துக்காகவும்., உலக க்ஷேமத்துக்காகவும் சேர்ந்து செயல்கள் புரிய வேண்டும் என்று அவை திட்டம் செய்துள்ளன. இதற்குத்தான் மதங்கள் தோன்றின. சரியான வழியைத் தெரிந்து கொண்டு, அதன்படி வாழ முற்பட்டு, அதன் மூலம் சித்த சுத்தி அடைந்து, நற்குணங்களைப் பெற்றுத், தீய குணங்களை அகற்றி வாழ்வதற்கான கர்மானுஷ்டானங்களைக் கூறுவது தர்ம சாஸ்திரம்.

புராண இதிகாசங்களில் பக்திதான் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றில் மேற்சொன்ன கர்மானுஷ்டானங்கள் ஆங்காங்கே கூறப்பட்டாலும் ஒரே இடத்தில் ஒரே சீராகக் கூறப்படவில்லை. பக்தி செய்து, பூஜையும் தியானமும் செய்வதுடன், குடும்பத்திலும், சமூகத்திலும் பற்பல காரியங்களை நாம் செய்ய வேண்டியிருக்கிறது. நடைமுறையில் அவற்றை நன்கு வகைப்படுத்தி ஒருங்கே கூறுவதுதான் தர்ம சாஸ்திரம்.

# முதலாம் சைவ வினா விடை

## புண்ணிய பாவ இயல்

1. சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை?
   வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம்.
2. வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்டவை எவை ?
   புண்ணியங்கள்
3. புண்ணியங்கள் ஆவன யாவை ?
   கடவுளை வழிபடுதல்; தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல்; உயிர்களுக்கு இரங்குதல்; உண்மை பேசுதல்; செய்ந்நன்றி அறிதல் முதலானவை.
4. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அநுபவிப்பர் ?
   மேல் உலகங்களாகிய புண்ணிய லோகங்களிலேபோய், இன்பத்தை அனுபவிப்பர்.
5. வேத சிவாகமங்களிலே விலக்கப்பட்டவை எவை ?
   பாவங்கள்
6. பாவங்கள் ஆவன யாவை ?
   கொலை, களவு, கள்ளுக் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடுதல் முதலானவை.
7. பாவங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர் ?
   நரகங்களிலே விழுந்து, துன்பத்தை அனுபவிப்பர்.

நன்றி : முதலாம் சைவ வினாவிடை

# சைவசமயம் – அடிப்படைத் தத்துவங்கள்



- வாகீசகலாநிதி, கனகசபாபதி நாகேஸ்வரன் - M.A



*"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்*
*ஞானகுரு வாணிபதம் நாடு".*

சைவம், சிவம், இந்து, லிங்கம் என்னும் சொல் வழக்குகள் பற்றியும் இவை வேத வழக்காகவும், ஷண்மதக் கோட்பாடாகவும், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், புராணோ· திகாசங்கள், காலத்திற்குக் காலம் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள், மகாநாட்டுத் தீர்மானங்கள் என்பவற்றினாற் பெறப்பட்ட தகவல்களை இக்கட்டுரை நிரற்படுத்திச் சைவசமயம் பற்றிய அடிப்படைகளை நிறுவுகின்றது.

'இந்து சமயம்' என்னும் பயன்பாடு – சொல் வழக்குப் – பற்றி முதலிலே ஆராயலாம். இந்துமதம் ஒரு மதமன்று. இந்துமதம் என்ற தொடர் கடவுள் ஆசிரியன், பிரமாண நூல், வழிபாடு என்பவற்றுள் எதன் பெயரையுஞ் சார்ந்ததாகத் தெரியவில்லை. சிந்து நதிக்கரையில் இருந்தவர்களை ஹிந்துக்கள் என்று பாரசீகர் அழைத்தனர். அவர்களை இந்துக்கள் என்று கிரேக்கர் கூறினர். இந்துக்கள் என்ற பெயரிலிருந்தே இந்தியா என்ற பெயர் ஏற்பட்டது. இந்திய நாட்டிலுள்ள பூர்வீக மக்கள் ஐரோபியரால் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். மேலைநாட்டினர் இந்து என ஒருமதம் இருப்பதாக எண்ணி இந்துமதம் என்ற பெயரைப் பயன்படுத்தினர்.

இந்துமதம் என்ற பெயர் தமிழிலாவது வடமொழியிலாவது கிடையாது. [1]வடமொழி வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட வைதிகர்கள் தங்கள் மதமே இந்துமதம் என்று பேசுபவராய் அம்மதமே இந்திய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் உரிய மதம் என்று நிலை நாட்ட முன்வந்துள்ளனர்.

ஆங்கில மதம், ஜப்பானிய மதம், அமெரிக்க மதம் என்று மதங்கள் இருக்குமாயின் இந்துமதம் என்றொரு மதமும் உண்டெனலாம். அவை இல்லாதது போல் இந்து என்ற ஒரு மதமும் கிடையாது. இந்தியாவில் தோன்றிய இந்துக்கள், மகமதியர் முதலிய எல்லோரையும் இந்தியர்கள் என்பது பொருந்தும். ஆனால் இந்தியாவில் தோன்றிய புத்தம், ஜைனம், வைதிகம், ஸ்மார்த்தம், சைவம், வைணவம் முதலிய எல்லா மதங்களையும் இந்துமதம் என்று கூறுதல் பொருந்துமாறில்லை. ஆதலால் வடமொழி வேதத்தின் வேறான சிறந்த பிரமாணங்களையுடைய சைவர்கள் வைணவர்கள் தங்கள் சமயங்களை இந்துமதம் என்று கூறுதல் அறிவுக்குப் பொருந்துவதாயில்லை. இந்திய மதங்கள் பல . அவற்றுள் சைவம் வைணவம் இருமதங்கள் என்றல் பொருந்துவதே.[2]

வேத வாக்கியங்களுக்குச் சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஏற்ற முறையில் பொருள் கொள்ளுதல் பைபிளுக்கும் குர்ஆனுக்கும் சைவ வைணவப் பொருள் கொள்ளுதல் போலாகும். வேதத்திலும் உபநிடதங்களிலும் சிற்சில இடங்களில் சைவ வைணவக் கருத்துக்கள் காணப்படுதல் பற்றி அவற்றைப் பிரமாணமாகச் சைவர்களும் வைணவர்களும் கொள்ளுதல் பொருத்தமின்றாம். சைவச் சிறப்புப் பிரமாண நூல்களாகிய பன்னிரு திருமுறைகளுக்கும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுக்கும் மாறுபாடில்லாத வடநூற் பகுதிகளே தழுவத் தக்கன என்று சைவமகாநாடு தீர்மானித்துள்ளது.

சைவ, வைணவ சமயங்கள் அடிப்படையில் ஒத்த கருத்துடையன. அது தொல்காப்பியம்,

திருவள்ளுவர் நூல், பரிபாடல் முதலிய சங்க நூலாராய்ச்சியாலும், தேவாரம் திருவாசகம், திருவாய்மொழி, திருமொழி ஆராய்ச்சியாலும் நன்கு புலனாகும். சைவம், வைணவம் என இருபிரிவுளடங்கிய சமயத்தைத் தமிழர் ஒரு சமயமென்று கருதி அதனைத் தமிழ்மக்கள் போற்றுவாராக.[3] என்பது கா. சுப்பிரமணியபிள்ளை குறியீடு. 'கடவுள்' என்னுஞ் சொல் கடவுளொருவரைத் தவிர வேறு எப்பொருளையும் குறிக்கப் பயன்படுவதில்லை. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய முதல்வனைக் குறிப்பதற்கு வேறு எந்தச் சொல்லும் அத்தகைய பொருத்தமுடையதென்று தோன்றவில்லை.

இந்துசமயம் என்ற பெயர் வழக்கும், ஷண்மதத்தில் ஒன்று சைவம் என்ற கருத்துநிலையும் பிறருக்குரியவை. அவை அவர்கள் நோக்கைப் பொறுத்துள்ளவை. அவை அவர்கள் மட்டில் இருக்கலாம். சர்ப்பமும் வாழவேண்டிய பிராணியே. அது தன்னளவில் வாழலாம். அதில் தவறில்லை. ஆனால் அதை வீட்டுக்குள் வரவழைத்து வைத்தல் ஆபத்தாகும். அதுபோல எம் சைவ சமூகம் தோற்றத்திலும் நிலையிலும் பகைப்புலமேயான இந்துசமயப் பெயர் வடிவுக்கும், ஷண் மதத்தொன்று சைவம் என்ற கருத்துக்கும் நூற்றுக்குநூறு சைவம் பயிலும் சமய ஸ்தாபனங்களில் இடங் கொடுக்கக் கூடாது. நம் சைவம் ஷண்மத சைவமன்று; அது சநாதன சைவம் என்பதையும், சிவன் ஆறுவேறு கடவுளில் ஒருவரல்லர்; அவர் அனைத்துக்கும் மேலான முழுமுதற் கடவுள் என்பதையும் நம்மால் ஆகுமட்டும் பிரகடனப்படுத்திச் சனாதன சைவ நிலை உறுதிபெற நிற்றல் வேண்டும். [4]

சித்தாந்த சைவம், காஷ்மீரசைவம், வீரசைவம், ஆகமதீர்த்த சைவமாகவும் இந்திய உபகண்டத்திலும் அப்பாலும் பரந்து கிளைத்துக் காணப்படுகிறது. சித்தாந்த சைவம் தமிழ் மக்கள் வளர்த்தெடுத்த சமயம். அதன் தத்துவங்கள் சைவசித்தாந்தம் எனப் பெயர் பெறுவன. மணிமேகலையிலும், திருமந்திரத்திலும் (கி. பி ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டு) சித்தாந்த சைவத்தின் சமய முடிவுகள் உருப்பெற்றன.

*'கற்பனகற்றுக் கலைமன்னு மெய்யோகம்*
*முற்பத ஞானமுறைமுறை நண்ணியே*
*சொற்பதமேவித் துரிசற்று மேலான*
*தற்பரங்கண்டுளோர் சைவசித்தாந்தரே;*

திருமந்திரம்

பிராமணனாய் இருந்தும் பிராமணத் தன்மை இல்லாதவன் அப்பிராமணன்.[5] என்பர் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். 'எமது சமயம் சுத்தாத்துவித சைவ சித்தாந்தம். சைவம் சிவ சம்பந்தம். உயிரின் உயர்ந்த உயர்வே சித்தாந்தம். முடிந்த முடிவென்பது சித்தாந்தம் என்பதன் பொருள்.

'முகத்துக்கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்'

(திருமந்திரம்).[6]

சைவசமயத்தின் தாற்பரியத்தினை எழுதுவதும், பேசுவதுமாகத் தன் அருமந்த வாழ்நாளைக் கழித்த ஞானத்தமிழ்முனிவர் பண்டிதமணி அவர்கள். சைவத்தின் பெருந்தனித்துவத்தினைப் பின்வருமாறு விபரித்துள்ளார்.

'பேரொளிப் பிழம்பாகிய இறையொளிக்குச் சீவசக்தியென்று பெயர்.

அது ஒரு ஞான சமுத்திரம்; கருணைக்கடல், இரங்காமலிருக்கமாட்டாமை அதன் இயற்கை'.[7]

சைவசமயம் அறிவுநெறி, அன்புநெறி, அறநெறி, ஒழுக்கநெறி, அனுபவநெறி, இல்லறநெறி, துறவுநெறி, சித்தர்நெறி (தியானநெறி), பத்திநெறி என அமைந்து உயிர்களை உய்விக்கிறது. தமிழர் சமயமான சைவத்தில் மெய்க்கொள்கையின் அறிவே வற்புறுத்தப்படுவதன்றி வழிபாட்டுமுறை அவரவர் கருத்திற்கேற்பவும், வசதிக்கேற்பவும் வகுத்துக் கொள்ள இடமுண்டு. 'அப்பனை ஆராவமுதினை வள்ளலை எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்துமின், அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே' என்கிறார் திருமூலர். 'சிவனைப்போற் தெய்வம் தேடினுமில்லை' என்ற கருத்து வெறும் புழுகுரையன்று.

*சைவத்தின்மேற் சமயம் வேறில்லை யதிற்சார் சிவமாம்*
*தெய்வத்தின்மேற் தெய்வமில்லெனும் நன்மறைச் செம்பொருள்வாய்*
*மைவைத்த சீர்திருத் தேவாரமுந் திருவாசகமும்*
*உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாளெம்முயிர்த் துணையே.'*

இப்பாடல் 'அருணைக் கலம்பகம்' என்னும் நூலிலே எல்லப் நாவலர் அவர்களாற் பாடப்பட்டுள்ளது. இப் பாடலே மிகவிரிந்த தெளிவாகவும், சுருக்கமாகவும் சைவத்தின் இலட்சியத்தை எடுத்துரைத்துள்ளது. திருவாசகத்திலே,

'...... எம்பிரானன்றி மற்றோர் தேவரைத் தேவரென்ன அருவராதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே' என வருகிறது. தமிழராகிய நமது சமயம் சைவம். சைவ முதற்கடவுள் ஒரே ஒருவர். அவர் சிவன். வழக்கிலே உள்ள மற்றெக் கடவுளரும் முதற் கடவுளராதல் இலர்'. [8]

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு நிற்கும் சித்தாந்தமானது சைவம் சார்ந்த, சாராத சமயங்களை நான்கு வகைகளாகத் தருகிறது. அவை புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள், அகச்சமயங்கள் என்பனவாகும். அவைதிக சமயங்களாறும் புறப்புறச் சமயங்களாகும். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், பைரவம், ஐக்கியவாதம் (வீரசைவம்) ஆகிய ஆறும் அகப்புறச் சமயங்களாகும். பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், ஈஸ்வர அவிகாரவாத சைவம், சிவசங்கி ராந்தவாத சைவம், சிவாத்துவித சைவம், எனு மாறினையும் அகச் சமயங்களாக எடுத்தாண்டனர்.

புறப்புறச் சமயங்கள் ஆறும் வேதங்களை ஏற்காத பிரிவினர்களாவர். புறச் சமயத்தவர்கள் அறுவரும் வேதங்களை ஏற்ற போதிலும் சிவாகமங்களைப் புறக்கணித்து நிற்பவர்களாவர். அகப்புறச் சமயத்தவர்கள் அறுவரும் சைவசமய நிலைக்குரியவர்காளக விளங்கிய போதிலும் வேதாகமங்களுக்குப் புறம்பானநூல்களைச் சிறப்புப் பிரமாணமாக ஏற்று நிற்பதால் வேறுபட்டவர்களாக விளங்கினர். அகச் சமயத்தார்களும் சைவ சித்தாந்த நெறியோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக விளங்கிய போதிலும் குறிப்பாக முத்திநிலையில் வேறுபட்டு விளக்கமுற்படுவதனால் சைவசித்தா ந்திகளினின்றும் வேறுபடுபவர்களாவர். [9]

'தத்துவ நிஜாது போக சாரம்' எனும் நூல் சிவனுடன் சம்பந்தமாகின்ற சைவம் எட்டெனக் கூறுகிறது. அவையாவன, பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம், காளாமுகம், சிவாத்துவித சைவம் என்பனவாம்.

சைவத்திற்குப் பேதமான சமயங்களாக ஊந்தசைவம், அனாதி சைவம், மகாசைவம், ஆதிசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம் குணசைவம், நிர்க்குணசைவம், அத்துவாசைவம், போகசைவம், ஞானசைவம், அவாந்தரசைவம், கிரியாசைவம், சுத்தசைவம், நாறுபாதசைவம், எனப் பதினாறு பிரிவுகளை எடுத்தாண்டுள்ளது. சிலர் சைவத்தை வேதசைவர், தாந்திரீகசைவர், மிக்சிரசைவர் என மூன்றாக வகுத்து எடுத்தலுமுண்டு. [10]

## அடிக்குறிப்புகள்

1. கா. சுப்பிரமணியபிள்ளை, கா., தமிழர் சமயம் (1940), சென்னை, பக். 50
2. மேலது, பக். 74.
3. மேலது, பக். 75
4. திருநெறித் தமிழ், (1998) ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்னும், வெள்ளிவிழாச் சிறப்பிதழ், கொழும்பு, பக். 31
5. மேலது, பக் 35.
6. இலக்கிய கலாநிதி, பண்டிதமணி, சி கணபதிப்பிளைளை, அத்வைத சிந்தனை (1984), பக். 111.
7. மேலது, பக். 30.
8. திருநெறித் தமிழ், மு.கு. நூல், பக். 29.
9. கலாநிதி. ஞானகுமாரன்.? நயந்தரும் சைவசித்தாந்தம், (1994) பக். 34.
10. Meenakshisundaram, T.P., (Essays) Four lectures on Saiva Siddhanta in Collected Lectures on Saiva Siddhanta (1978) Annamalai Univesity, India, P.P: 210 -218

# உக்கிரகுமாரனுக்கு வேல் வளை செண்டு கொடுத்தமை

- கூடலான்-

சுந்தர பாண்டியர் தம் அருமைக் குமாரராகிய உக்கிரவருமருக்கு விவாகம் செய்து வைக்க விரும்பினார். கருத்தினைப் புரிந்து கொண்ட அமைச்சர்கள் அறிஞர்களொடுங் கூடி ஆராய்ந்து வடதேசத்து மணவூரென்னும் நகரத்துச் சூரிய குல அரசனாகிய சோமசேகரன் புதல்வி காந்திமதியைத் திருமணஞ் செய்துவைக்கச் சிந்தித்தனர்.

சோமசுந்தரக் கடவுள், அன்றிரவே சோமசேகரன் கனவிற் செய்தியைப் புலப்படுத்தி, மகளை மதுரைக்கு அழைத்துச் செல்லுமாறும் பணித்தனர். சிவனது எளிவந்த செயலை வியப்புடன் நயந்த சோமசேகரன் அதிகாலை எழுந்து செய்ய வேண்டிய கடன்களையெல்லாம் நிறைவு செய்து, தன் புதல்வியைச் சேடியர்களுடன் தேர்மீதேற்றி, அமைச்சர்கள் படையினர் சூழத் திருமணத்திற்கு வேண்டிய திரவியங்களுடன் மதுரையை நோக்கி வழிக் கொண்டான்.

திருமணப் பேச்சை நோக்கமாகக் கொண்ட உக்கிர வருமருடைய சுற்றத்தவர், அமைச்சர் முதலானோர் மணவூரை நோக்கிப் பயணமாயினர். இருபகுதியினரும் இடைவழியிற் சந்திக்கின்றனர். செய்தியைப் பகிர்ந்து கொள்கின்றனர். உக்கிர வருமருடைய உறவினர்கள் சோமசேகர இராசாவிடம் திருமண உறவிற்கான அங்கீகாரம் வேண்டு கின்றனர். சோமசேகர இராசா தாம் கண்ட கனவுச் செய்திகளையெல்லாம் சொல்லித் திருமணத் தொடர்பிற்கு அங்கீகாரம் அளிக்கின்றார். கேட்டு மகிழ்ந்த அமைச்சர்கள் தூதுவர்கள் மூலம் செய்தியைப் பாண்டிய மன்னருக்கு அனுப்பி விட்டுச், சோமசேகர இராசாவையும் புதல்வியையும் அழைத்துக் கொண்டு சென்றனர். மதுரையை அடைந்ததும் சோமசேகரர் சுந்தர பாண்டியரை வணங்க அவர் அவனைத் தழுவி முகமன் கூறி ஆசனத்திருத்தினார்.

பின்னர் நடந்த உரையாடல் மூலம் திருமண முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. வேண்டிய அனைவர்க்கும் திருமண ஓலை போக்கினர். முருசறைவித்துத் திருமணச் செய்தி மக்களுக்குத் தரப்பட்டது. நகர் விழாக் கோலம் பூண்டது. திருமுகம் பெற்ற அரசர்கள், முனிவர்கள், பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள் மதுரையை அடைந்தனர். வந்தவர்கள் சுந்தர பாண்டியரையும் தடாதகைப் பிராட்டியாரையும் பணிந்து வணங்கிப் பொருத்தமான வரிசை பெற்றுத் தங்கினர். சோமசேகர இராசா மகள் காந்திமதி பற்றிய சோதிட வரலாறுகளை நூல்வழி பெற்ற பிருகஸ்பதி பகவான் மேலும் ஆய்வு செய்து எல்லோருக்குந் தெரிவித்தார். கேட்டவர் யாவரும் மகிழ்ந்தனர்.

பின்னர் உக்கிரகுமாரனைப் புனிதநீரில் நீராட்டித் திருமணக் கோலம் செய்து, மங்கல வாத்தியங்கள் ஒலிக்கத் திருமணத்திற்கான ஆசனத்தில் அமரவைத்தனர். மகளிர் காந்திமதியை நீராட்டி மணக்கோலம் புனைந்து அழைத்து வந்து

உக்கிரகுமாரனுக்கு வலப்பக்கத்தில் இருத்தினர். அப்போது சோமசேகரர் தன் மனைவி கரகநீர் வார்ப்ப உக்கிரகுமாரருடைய பாதங்களை விளக்கிப் பூமாலை சூட்டிக் காந்திமதியுடைய கையை உக்கிரகு மாரனுடைய கைமேலேற்றி, வேத மந்திரத்தைச் சொல்லித் தத்தஞ் செய்து கொடுத்தான். மங்கல வாத்தியங்கள் ஆரவாரித்தன. எல்லோரும் பூமாரி பொழிந்தனர். அக்கினி வலஞ்சுழித் தெழுந்தது. மகளிர் வாழ்த்த, உக்கிரகுமாரர் காந்திமதியைத் திருமாங்கலியந் தரித்துப், பாணிக்கிரகணஞ் செய்து துணைவியாக்கிச் சொக்க நாதரையும் மீனாட்சியம்மையையும் வழிபட்டுத் தாய் தந்தை யரையும் வணங்கினார். திருமணத்தின் பொருட்டு வந்தோரெல்லோரையும் அமுது செய்வித்து வரிசைப்படி உபசரித்துச் சுந்தரபாண்டியர் அனுப்பி வைத்தார்.

நாள்கள் சில கழிந்தன. சுந்தரபாண்டியர் உக்கிரகுமாரரை நோக்கி மகனே, இந்திரனும் வருணனும் உனக்குப் பகைவர்; மேருமலை தருக்கடையும்; இந்திரன் முடி சிதறும் வண்ணம் இந்த வளையை எறிவாயாக. கடல் சுவறும் வண்ணம் இந்த வேலை விடுப்பாயாக; மேரு தருக்கழியும் வண்ணம் இந்ததத் தண்டினால் அடிப்பாயாக, என்று சொல்லி மூன்று படைக்லங்களையும் கொடுத்தருளினார். உக்கிரகுமாரர் வணக்கத்துடன் அவற்றைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர், சுந்தர பாண்டியர் உக்கிரகுமாரருக்கு முடிசூட்டி ஆணையை, அரசுரிமையை, செங்கோலை அவரிடம் வழங்கினார். தன்மைந்தன் உக்கிர குமாரனைக் கண்ணை இமை காப்பது போற் காத்துக் கொள்ள வேண்டுமெனச் சுமதி முதலி அமைச்சர்களைப் பணித்தார். அமைச்சர்கள் குறிப்பிடும் நீதிவழி பூமியை ஆளவேண்டுமென மகன் உக்கிரகுமாரருக்கும் தந்தை பணிப்பு வழங்கினார். பின்னர் தன் கணங்களெல்லாம் முன்னை வடிவமாகத் தன் நாயகி தடாதகைப் பிராட்டியாரோடும் திருக்கோயில் சென்று எழுந்தருளி இருந்தார்.

ஆதாரம் : நாவலர் திருவிளையாடற் புராண வசனம்

## காக்க வேண்டிய கடமைகள்

தக்கிணை வேள்வி, தவம், கல்வி இந்நான்கும்
முப்பால் ஒழுக்கினால் காத்துய்க்க உய்யாக்கால்
எப்பாலும் ஆகாக் கெடும்.

கற்பித்த ஆசிரியருக்குக் காணிக்கை தருதல், வேள்வி செய்தல், தவம் மேற்கொள்ளுதல், கற்றறிதல் ஆகிய நான்கினையும்; அறம் பொருள் இன்பம் என வகுத்த முப்பால் கூறும் வழியில் காத்து வளர்க்க வேண்டிய கடமையாகக் கொள்க. அப்படிக் கொள்ளா விட்டால் எவ்விடத்தும் இவற்றால் உண்டாகும் பயன் கிடைக்காமற் பாழ்படும்.

நன்றி: ஆசாரக் கோவை

# சிவபுண்ணியம் செய்யும்போது நினைவு வேறாதலாகாதெனல்

- ஆறுமுகநாவலர் -

சுந்தரமூர்த்திநாயனாரும் அநிந்திகை கமலினி என்னும் பெண்களும் முறையே சிவனுக்கும் உமாதேவிக்கும் புஷ்பங் கொய்யும்போது இச்சை கொண்டமையால், பூமியிலே பிறந்து போகம் அனுபவிக்கும்படி சபிக்கப்பட்டார்கள் என்று சொல்லுகையால்; புஷ்பம் எடுத்தல் முதலாகிய சிவபுண்ணியக்களைச் செய்யும்போது நினைவு வேறாதலாகாதென்பது துணியப்பட்டது. அது

*''கொந்தலர் கொய்யும் போது கூர்விழி மைய லாலே*
*பைந்தொடி மடவார் தம்மைப் பார்த்தலாற் கைலை வெற்பிற்*
*சுந்தரன்பட்ட காதையறிதிரோ துணர்மென் போதா*
*லந்தணர் கீழ்களாவார் கீழ்களந் தணர்க ளாவார்*

என்னும் புட்பவிதிச் செய்யுளா லுமறிக. கைலாசவசிகளாய்ச் சிவனை இடைவிடாது சேவிக்கும் அன்பர்களுக்கு இக்குற்றத்தின் பொருட்டு இத்தண்டம் கிடைத்ததாயின், ஒன்றுக்கும் பற்றாத சிறியேங்கள் குற்றஞ் செய்யின் எத்துணைப் பெருந்தண்டம் கிடைக்குமோ என்று அஞ்சி நடுங்கி, சிவபுண்ணியங்களைச் செய்யும்போது சிறிதாயினும் மனசைப் பிறிதொன்றிற் செல்ல விடாமற் சிவனுடைய திருவடிகளிலே செலுத்துக.

நன்றி : திருத்தொண்டர் புராண சூசனம்

# சைவ சமய அறிவுப் போட்டி

## போட்டி விதிகள்

1. பாடசாலை மாணவர்கள் மட்டுமே இப்போட்டியிற் பங்கு கொள்ளலாம்.
2. சைவநீதியில் வெளியாகும் சைவசமய அறிவுப் போட்டி விண்ணப்படிவம் விடையுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
3. போட்டியாளரை உறுதிப்படுத்துபவர் ஒரு பாடசாலை அதிபராக அல்லது சைவநீதிச் சந்தாதாரராக இருக்க வேண்டும்.
4. நடுவர் குழுவின் தீர்ப்பின் படி பரிசில்கள் வழங்கப்படும்.
5. விடைகள் யாவும் 15 – 4 –99 இற்கு முன் கிடைக்க வேண்டும்.
6. விடைகள் அனுப்ப வேண்டிய முகவ்ரி :செ. நவநீதகுமார், நிர்வாக ஆசிரியர், சைவநீதி 42, ஜானகி லேன், கொழும்பு - 04.

---

## சைவசமய அறிவுப் போட்டி - 1999
## விண்ணப்பம்

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

..........................................

பாடசாலை : ..........................................

வகுப்பு : ..........................................

*போட்டி விதிகளுக்கு அமைவாக உள்ளேன்*

திகதி.................................... ..........................................

விண்ணப்பதாரர்

*விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துபவர்*

கையொப்பம் : ..........................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

பதவியும் (முத்திரையும்) ..........................................

# சைவ சமய அறிவுப் போட்டி - 1999

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. சான்றவ ராய்ந்திடத் தக்கதாம் பொருள் எவை?
2. பங்கஞ் செய்த பிறை சூடிய பெருமான் எழுந்தருளிய தலம் எது?
3. "சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம் சிவபெருமான் சேவடியே சேரப் பெற்றோம்" என்று பாடியவர் யார்? அத்திருப்பாடலின் தொடக்கம் எது?
4. "அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு" என்று இறைவனாற் பணிக்கப் பெற்றவர் யார்?
5. எழுவகைத் தீட்சைகளையும் வரிசைப்படுத்துக.
6. மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் எவை?
7. மாசேசுர பூசையாவது யாது? இதில் ஓதத்தக்க ஒன்று எழுதுக.
8. சிவ விதரங்கள் எவை? அவற்றுள் ஒன்று பற்றி விபரிக்குக.
9. க்ஷணிக லிங்கம் எத்தனை வகைப்படும்.
10. அட்ட வீரட்டானச் செயல்களுள் ஒன்றை விபரிக்குக.
11. திசையுக்கிரசோழன் மனைவி பெயர் என்ன?
12. கால வந்தனமாவது யாது? கால வஞ்சினமாவது யாது?
13. திருவாசகம் திருக்கோவையார் இரண்டிலும் உள்ள பாடல்கள் எத்தனை.?
14. சிவஞான போத சூத்திரங்கள் எத்தனை? வரிகள் எத்தனை? சொற்கள் எத்தனை? எழுத்துக்கள் எத்தனை?
15. ஆலயத்தில் வீழ்ந்து வணங்குதல் பற்றிய விளக்கம் தருக.
16. ததீசி முனிவரிடம் பெற்ற குலிசத்தால் இந்திரன் அழித்த அசுரன் யார்?
17. குளக்கோடர் என்ற பெயரின் பொருள் என்ன?
18. கந்தபுராணம் உற்பத்தி காண்டத்திற் கூறப்பட்ட நாயன்மார் மூவர் பெயரினையும் தருக.
19. ஆறு ஆதாரமும் எவை? ஆறு ஆதாரத் தலங்களையும் அங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயரினையும் எழுதுக.
20. பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ள காரைக்காலம்மையார் பாடல்கள் எத்தனை?

குறிப்பு : மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளைச் சைவநீதி இதழ்களிற் கண்டு கொள்ள முடியும்.

உ
சிவமயம்

# உங்கள் பங்களிப்பு

எங்கள் எண்ணம் நிறைவு பெற உங்கள் ஒவ்வொருவரதும் நிறைவான ஒத்துழைப்பு வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் சைவநீதியின் உறுப்பினர் ஆகவேண்டும்.

## சைவநீதி மாத இதழ்

*பெறுமதி விபரம்*

| | தனிப்பிரதி | ஆண்டொன்றிற்கு |
|---|---|---|
| இலங்கையில் | ரூபா 20.00 | ரூபா 200.00 |
| இந்தியாவில் | ரூபா 20.00 (இந்திய ரூபா) | ரூபா 200.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுன் 10 அல்லது US $ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி*

**S. NAVANEETHAKUMAR,**
42, Janaki Lane,
Colombo - 04,
Sri Lanka.

உ

குருபாதம்

# குருபூஜை விழா

## 25.03.1999

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர்
நல்லைக் குருமணி
*ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின்*

## 18வது ஆண்டு குரு பூஜை ஆராதனை விழா

நிகழும் வெகுதானிய வருடம் திருவாதிரை நட்சத்திரம் கூடிய பங்குனி பதினோராம் நாள் (25.03.99) வியாழக்கிழமை குருமூர்த்த ஆலயத்தில் நடைபெறும்.

## நிகழ்ச்சிகள்

**காலை 10.00 மணி** - யாக பூஜை

**முற்பகல் 11 மணி** - குருமூர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தியநாத சுவாமிக்குச் சங்காபிஷேகம் நடைபெற்று 12 மணிக்குப் பூஜையும் திருமுறை அர்ச்சனையும் கோபூஜையும் நடைபெறும். (பூஜைகள் யாவும் ஆதீன சிவாசாரியர்களால் நடத்தப்படும்)

**பகல் 12.30 மணிக்கு** - மாகேசுரபூஜை நடைபெறும்.

**பிற்பகல் 2.00 மணி** - திருநெறிய தமிழ் இசை உரை அரங்கு
*(அகில இலங்கைத் திருமுறை மன்றம்)*

**மாலை நிகழ்ச்சிகள்** : 3.00 மணிக்குப் புராணப்படிப்பு; திருவிளையாடற் புராணம்

*அனைவரும் வருக. குருவருளும் திருவருளும் பெறுக.*

*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*ஸ்ரீலங்கா.*

*இரண்டாவது குருமகா சந்நிதானம்*
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
*திருவுள்ளப் பாங்கின்வண்ணம்,*
ஆதீன மேலாளர்.

Reg. No: QD/37/ News 99. இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 48B, புளூமெண்டோல் வீதி, கொழும்பு – 13. என்னும் முகவரியிலுள்ள யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1999-03-22 இல் வெளியிடப்பட்டது.